


அறைவு 03 இயம் 11 October 11-17 , 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
## MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 16 விலை : 30.00




# சம்பூர் நிலக்கரி மின்திட்டத்தை தாமதப்படுத்தும் இந்தியா?




சம்பூர் நிலக்கரி மின்திட்டத்தைத் தாமதப்படுத்துவது இந்தியத் தரப்பு என மின்சார சபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் இந்தியப் பங்காளரான நெசனல் தேர்மல் பவர் கோப்பரேசன் ஒவ் இந்தியா

கரி மின்னுற்பத்தி தொடர்பான சூழல் தாக்கமுறும் அறிக்கையின் விவரக் குறிப்புக்கள் மீது ஆய்வுகளை மேற்கொள்வதற்காக மிகைநாட்களை நுகர்ந்து வருவதால் இத் தாமதம் எழுந்துள்ளது. 13

நுரைச்சோலை அனல் மின் நிலையத் தொகுதி

– மாணவனை மேசையில் அறைந்த ஆசிரியர் –

## முன்னரும் பல குற்றங்கள் புரிந்துள்ளாரா?..




மாணவனை மேசையில் அறைந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஆசிரியர் ஏற்கனவே பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர் எனத் தெரியவருகின்றது.

அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே அவர் இவ்வாறான செயலைச் செய்துள்ளார். ஒவ்வொரு தடவையும் அவர் மீதான நடவடிக்கையாக இடமாற்றம் மட்டுமே வழங்கப்படுவதாகவும் தற்காலிகப் பணிநீக்க உத்தரவு 13

வறுமையால்

## கழுத்தை அறுத்த முதியவர்

### கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் சம்பவம்



உண்பதற்கு வழியின்றிப் போனதால் தனது உயிரை மாய்த்துக் கொள்ளக் கழுத்தை அறுத்த முதியவர் அயலவரால் காப்பாற்றப்-பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் நடந்தேறியுள்ளது. காயமடைந்த முதியவர் திருகோணமலைப் பொது வைத்திய 13

## கிளிவெட்டி முகாமில் மக்களை அச்சுறுத்திய சீருடையணிந்தவர் யார்?



கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் உள்ள மக்களை சீருடையணிந்த சிலர் கடந்த 8ம் திகதி அச்சுறுத்தியுள்ளதாகத் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கழுத்தை அறுத்துக் கொண்டவர் வறுமையால் அவ்வாறு செய்யவில்லை என்று கூறுமாறும் மனநிலைப் பாதிப்பாலேயே 13

## இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் தொழிற்சங்கச் சட்டத்தை மீறுகின்றது

–கிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு–

திருகோணமலையில் ஆசிரியர்களைக் கட்டாயமாக தமது ஆசிரியர் சங்கத்தில் இணைக்க தமிழர் ஆசிரியர் சங்கம் முயல்வதாகக் கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கம் (கி.மா.ஆ.ச)குற்றஞ்சாட்டியுள்ளது.

கி.மா.ஆ.சங்கத்தின் பேசவல்ல அதிகாரியான திரு. ஜெயராஜ் அனுப்பி வைத்துள்ள 13

## கோபியின் மனைவி தடுக்கப்பட்டார்



விடுதலைப் புலிகளை இலங்கையில் மீள உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட கோபியின் மனைவி வெளிநாட்டுக்குப் பயணித்த போது விமான நிலையத்தில் வைத்துத் தடுக்கப்பட்டுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதத்தில் விடுதலைப்புலிகளை மீள உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் மூவர் தேடப்பட்டு வந்தனர். அவர்களுள் முதன்மையானவராகத் தேடப்பட்ட கோபி என்ற பொன்னையா செல்வநாயகம் கஜீபன் என்பவரின் மனைவி திருமதி. சர்மிளா கஜீபன் என்பவரே இவ்வாறு தடுக்கப்பட்டுள்ளார்.

கோபி தேடப்பட்ட காலத்திலேயே கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் கோபியின் மரணத்தின் பின்னர் குற்றங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அதனைத் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ, கடல்முக வீதி
திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042

# இடைத்தங்கல் முகாமும் ஒடுங்கும் மக்களும்

திருகோணமலை மாவட்டத்தில் இன்றுவரை மூன்று இடைத்தங்கல் முகாம்கள் 2006ம் ஆண்டில் இருந்து இயங்கி வருவது உண்மை.

ஆனால் இதனை மறைக்க மேற்கொள்ளும் கடும் முயற்சிகளை அரச தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்திற்கு உண்மை நிலையை வெளிப்படுத்த அரசு ஏனோ விரும்பவில்லை. அதனை விடுத்து அனைத்து மக்களும் மீளக் குடியேற்றப்பட்டு விட்டார்கள் என்று வெளிப்படுத்தவே அனைத்துத் தரப்பும் வெளிக்காட்ட முயற்சிக்கின்றன.

ஏன் அந்த மக்கள் இடைத்தங்கள் முகாம்களில் இருக்கின்றார்கள்? ஏனெனில் அவர்களின் வாழ்விடங்களை மீளவழங்க தயாரில்லாமல் அரசு இருப்பதே காரணம். ஆனால் அந்த நிலங்களுக்குப் பதிலாக நீர்வசதியோ அல்லது போக்குவரத்து வசதியோ இல்லாத மலைப்பாங்கான பிரதேசங்களில் அம்மக்களைக் குடியேறச் சொல்லி வற்புறுத்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வளமான மண்ணை விடுத்து வாழ்வாதாரமற்ற வளங்குன்றிய மண்ணில் குடியேற மறுத்து வருகின்ற மக்களை இடைத்தங்கல் முகாம்களில் வாழ்பவர்களாகக் காட்ட அரசு விரும்பவில்லை. கைகாட்டும் நிலத்தில் குடியேறாவிட்டால் முகாம்களில் வாழ்பவர்கள் தமது விருப்பப்படியே அங்கு வாழ்கின்றனர். அதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்ற தோரணையில் அரச இயந்திரம் இயங்க முயற்சிக்கின்றது.

வெளிப்படையாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள வேளையில் உட்கிடையாக அந்த மக்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை ஆயுதத் தரப்பினர் முன்னெடுப்பதாகத் தெரிகின்றது.

அந்த முகாம்களும் அம்முகாம்களில் வாழும் மக்களும் எவ்விதமான சுதந்திரச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

இயல்பாக ஒன்றுகூடும் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் என்பன வரையறுக்கப்பட்டுள்ளது. யாரும் புதிதாக உள்ளே வருவதும் அவர்களுடன் அம்மக்கள் சுதந்திரமாகக் கதைப்பதும் தடுக்கப்பட்டுள்ளது. அத்தடையானது வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உட்கிடையான இயல்பாக முகாம் மக்களின் வாழ்வில் புரையோடிப்போயுள்ளது.

இவ்வாறு இருக்கும் நிலைமையில் முகாம்களில் வாழும் மக்களில் வருமான மட்ட ஏற்றத்தாழ்வுகள் இரண்டு பிரிவுகளை உருவாக்கிவிட்டுள்ளது.

வாழ்வுக்குத் தேவையான நிதியைத் தேட மிகக் கடினமான சவால்களை எதிர்கொள்ளும் தரப்பினர் அதன் ஒரு பிரிவாக உள்ளனர்.

அப்பிரிவிலுள்ள சிலரின் பலவீனங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் தரப்புக்கள் தமக்குத் தேவையானவற்றை அவர்களிடமிருந்து எதிர்ப்பின்றிப் பெற்றுக்கொள்ள பணத்தையும் பொருட்களையும் பயன்படுத்திக் கொள்கின்றன.

போரில் கணவனை, குடும்பத் தலைவனை, வருமானமீட்டும் இளைய வயதினனை இழந்து வருமானம் ஈட்டப் பெரும் சவால்களுக்கு முகங்கொடுப்பவர்களின் வாழ்நிலை மிக கவலைக்குரியதாக இருக்கின்றது. வயதானவர்களைத் தங்கியிருக்கும் பேரக் குழந்தைகளின் வாழ்நிலை இலகுவாக வளைக்கக் கூடியதாக இருக்கின்றது.

முகாம்களில் மக்கள் ஒடுங்கிப் போகின்றார்கள் என்பதே உண்மை. எமக்கருகில் நிகழும் இந்த ஒடுக்குமுறையை இடைவிடாது பேச, எழுத, சிந்திக்க அனைவரும் முன்வர வேண்டும்... முன்செல்வோமா?

# "பிரதீபா பிரபா" திருமலை வலய வெற்றியாளர்கள்



2014ம் வருடத்துக்கான ஆசிரியர் பிரதீபா விருது பெற்ற திருகோணமலை கல்வி வலயத்தைச் சேர்நத அதிபர்களான செ.பத்மசீலன்(ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி),எஸ்.ரவிதாஸ் கலைமகள் மகா வித்தியாலயம்., காளிராசா (பாரதி வித்தியாலயம்) .மற்றும் ஆசிரியர்களான அ.அதிஸ்டலிங்கம். திருமதி ச.ராமநாதன்( கலைமகள் மகா வித்தியாலயம். , திருமதி ரா.விஜயரெட்ணம், திருமதி ஜீ.மனோகரன், திருமதி வா.கௌரிதரன்.(ஸ்ரீ சண்மகா இந்து மகளீர் கல்லூரி) (கதிரவன்)

## ஆசிரியர் தினம்
# ஸ்ரீகோணேஸ்வராவின் 1994-97 பழைய மாணவரால் கொண்டாடப்பட்டது

இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின்(தேசிய பாடசாலை) ஆசிரிய சமூகத்தை பாராட்டிக் கௌரவிக்கும் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள் 07.10.2014 அன்று மாலை கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் சிறப்புற இடம்பெற்றது. இந்த ஆண்டு(2014)சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகளில் விசேட அம்சமாக ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 17 வருடங்களுக்கு முன் ஒரே வகுப்பில் (1997 A/L, 1994 O/L) கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் ஒன்றிணைந்து இந்நிகழ்வின் அனுசரணையாளர்களாகச் (Sponsor) செயற்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



# இலைக்கஞ்சி வழங்கும் லயன்ஸ் கழகம்

திருக்கோணமலை நகர லயன்ஸ் கழகம் வாரத்தில் இரு நாட்கள் திருக்கோணமலை பொது மருத்துவ மனையில் நடைபெறுகின்ற கிளினிக்கிற்கு வருகின்ற பொதுமக்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தினை ஆகஸ்ட் முதல் நாள் தொடக்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கழகத்தின் உறுப்பினர்களின் நிதி மூலம் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (அச்சுதன்)





# முன்னாள் போராளிகளுக்கு 222 படைப்பிரிவு உதவி

222வது படைப்பரிவின் ஏற்பாட்டில் முன்னாள் போராளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது. ஸ்ரீ சண்பகா மகா வித்தியாலயத்தில் வைத்து கடந்த 08.10.2014 காலை இவ்வைபவம் நடைபெற்றது. இதன்போது மாடுகள் இருவருக்கும், தையல் இயந்திரங்கள் இருவருக்கும், துவிச்சக்கர வண்டிகள் 14 பேருக்கும் மண்வெட்டி 60 பேருக்கும் . நீர் குழாய் பொருத்தும் கம்பனியில் 10 தொழிலாளருக்கு வேலைவாய்ப்புகளும் வழங்கி வைக்கப்பட்டது.

# செம்பீஸ்வரர் ஆலயத்தில்
## பௌர்ணமி தின பூசை



வரலாற்றுப் பழமை வாய்ந்த குச்சவெளி செம்பீஸ்வரர் ஆலயத்தின் புதிய நிர்வாகத்தின் தலைமையில் பௌர்ணமி விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கடந்த 8ம் திகதி நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனன், குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் புஸ்பகாந்தன், உட்படப் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட இக்கோவில் சிதைக்கப்பட்டு கற்தூண்கள் பல அருகில் கிடப்பில் போடப்பட்டுள்ளது என சிதைந்த மண்டபங்கள் பல அங்கு காணப்படுவதுடன் நீர்த்தடாகங்கள் மூன்றுள்ளதாகவும் அங்கு செல்ல இராணுவத்தினர் அனுமதிப்பதில்லை என்றும் எமது செய்தியாளர் தெரிவித்தார். (பிரதீஷன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Times

### வரியைச் செலுத்தி சலுகையை அனுபவியுங்கள்




வருடாந்தம் 250,000 ரூபாவிற்கு மேல் வரி செலுத்துபவருக்கு சலுகைகளை வழங்க அரசு முன்வந்துள்ளது. இச்சலுகைகளுள் வரியற்ற வாகனங்களை இறக்குமதி செய்யும் போது மேலதிக கழிவு உரிய திகதிக்கு முன்னரே செலுத்துபவருக்கு கழிவுகள், வெளிநாட்டுப் பயணத்தின் போது விமான தளத்தில் முன்னுரிமை, பொருட்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதி வரிக் கழிவு போன்றவை அச் சலுகைகள் ஆகும்.

தற்போது 15 வீதமான வாகன இறக்குமதி வரிக்கழிவு 25 வீதமாக அதிகரிக்கப்படுவதுடன் இச்சலுகை அனைத்து வாகனங்களுக்கும் விரிவாக்கப்படவுள்ளது.

ஒரு மில்லியனுக்கு மேல் வரி செலுத்துவோருக்குத் தங்க நிற அட்டையும் ரூபா 500,000 இற்கு மேல் வரி செலுத்துவோருக்கு வெள்ளி நிற அட்டையும் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவித்த வரி திணைக்கள சிரேட்ட ஆணையாளர் இவ்வட்டைகளைக் கொண்டு இலங்கை மக்கள்வங்கி, விமான நிலையம், துறைமுகம் மற்றும் அரச அலுவலகங்களில் முன்னுரிமையை அனுபவிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

### சனாதிபதிக்கு அதிசொகுசு விமான வசதி



இலங்கையின் விமான சேவைகளுள் ஒன்றான ஸ்ரீலங்கனின் ஏர்பஸ் A330இல் அதிசொகுசு வசதிகள் சனாதிபதிக்கும் அவரது பரிவாரத்திற்கும் ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

சொகுசாகப் பயணம் மேற்கொள்ளும் பொருட்டு இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதி சொகுசு பெட்டியானது உற்பத்தி செய்யப்பட்டு விமானத்தில் பொருத்தப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துள்ள நிறுவனம் இந்த விசேட பெட்டிக்கு எவ்வளவு செலவானது என்பதையும் எவ்வித விசேட ஏற்பாடுகளை இப்பெட்டியை மேற்கொள்ளும் போது இலங்கை கோரியது என்பது பற்றியோ விபரங்களை தெரிவிக்க குறித்த நிறுவனம் மறுத்துவிட்டது.

### எல்லா இன மக்களினதும் ஆதரவைப்பெற முயற்சி



சனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அனைத்து இன மக்களினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசு புதிய முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.

"சமூக நல்லிணக்கமும் சக வாழ்வும்" என்ற அமைச்சரவை உப குழவைச் சனாதிபதியின் தலைமையில் உருவாக்கும் அரசியல் மட்டத்தில் உருவாக்கவும், அலுவலக மட்டத்தில் அதே வகையான குழுவொன்றை உருவாக்கி அதற்கு சனாதிபதிச் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையேற்கவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

"இலங்கையிலுள்ள சமூகங்கள் கடந்த முப்பதாண்டு காலப் போரின் போதான இராணுவப் பரசன்னத்தால் தம்மிடையே பெரும் பிளவைக் கொண்டுள்ளன. ஒருவரையொருவர் நம்பிக்கையுடன் பார்ப்பதற்குப் பதிலான நட்பற்ற விரோத மனப்பாங்கே நாம் ஒன்றாகச் சேரும் போது எழுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப சக வாழ்வை ஊக்குவிக்கும் முயற்சிகளை முறையாக சமூகங்களிடையே உருவாக்குவதுடன் முறையான இலக்குகளை நிர்ணயித்து அவற்றை அடைய முயற்சிக்க வேண்டும்" எனவும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

### புலிகளின் குற்றங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பு – சங்கரி




பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காவு கொள்ளப் பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தமிழரசுக் கட்சியுமே பொறுப்பேற்க வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் மோடிக்கு வரைந்த கடிதத்திலேயே சங்கரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"கணக்கற்ற அளவில் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களால் மாண்டு போன ஆயிரக்கணக்கான மக்களுள் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர். 2004ம் ஆண்டின் த.தே.கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனப்படி த.தே.கூட்டமைப்பும், தமிழர் கட்சியும் மேற்போந்த குற்றங்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாகின்றனர்.

## the Sunday Observer

### முஸ்லீம்கள் அமைதியாக வாழ்வதற்கு குர்றான் உதவிபுரிகின்றது – சனாதிபதி




குர்ஆனைப் போதிப்பதாலும் அதனைக் கற்றொழுகுவதாலும் முஸ்லீம்கள் இந்நாட்டில் அமைதியாக வாழ்வதற்கு வழி ஏற்படுகின்றது என சனாதிபதி தனது ஈத் வாழ்த்துச்" செய்தியில் குறித்துள்ளார். "உலகில் வாழும் முஸ்லீம் சமூகத்தினரின் சகோதரர்களாக உள்ள இலங்கை முஸ்லீம்கள் ஒன்றாகக் கொண்டாடும் இத் திருநாளில் நான் எனது வாழ்த்துச் செய்தியை உங்களுக்கு தெரிவிப்பதால் பெருமை கொள்கின்றேன்" என அவரது வாழ்த்துச் செய்தி தொடர்கின்றது.

### வேகமாக முன்னேறும் இலங்கை – எஸ்.பி



அபிவிருத்தி அடைந்துவரும் நாடாகத் தரப்படுத்தப்பட்டுள்ள இலங்கை மிக வேகமாக அபிவிருத்தியடைந்த நாடுகள் எனும் தரத்தை நோக்கி முன்னேறி வருவதாக உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வேகமாக அபிவிருத்தி அடைவதற்கு சனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு என்பனவே காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனை மக்களிடம் முன்னொண்டு செல்வதன் மூலம் எதிர்காலத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தனது பாதையை உறுதிப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

### வளர்ச்சிக்கான மருந்துகள் உடல்நலக் குறைவை ஏற்படுத்தும்

பழவகைகள் மற்றும் மரக்கறி தானிய வகைகளின் விருத்திக்காகவும், கிருமிகளின் தாக்கத்தைத் தவிர்ப்பதற்காகவும் விசிரப்படும் மருந்துகள் மனிதருக்கும் உடல்நலக் குறைவை ஏற்படுத்தும் பாரிய சவாலாக எழுந்துள்ளது.

தேசிய வைத்தியசாலையின் நஞ்சூட்டல் பிரிவின் தலைவர் மருத்துவர் வருண திலகரட்ண இவ் அச்சுறுத்தல் தொடர்பாக தெரிவிக்கையில் உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சிக்காக மருந்து வகைகள் விசிறப்பட்ட உணவுப் பொருட்களை நுகருபவர்கள் கடும் உடல்நலக் குறைவை எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். இவ்வாறான மருந்துகள் மனித உடலின் முக்கிய பாகங்களான மூளை, இதயம், சிறுநீரகம், சமிபாட்டுத் தொகுதி போன்றவற்றைப் பாதித்து குறுங்கால, நீண்டகால உடல்நலக் குறைவை ஏற்படுத்துவதுடன் மரணத்தையும் விளைவிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

## the Sunday Leader

### வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கேர்கல் ஆணையாளர் அமைதி



வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களைப் பணிக்கமர்த்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் அமைதி காப்பதாகத் தெரிகின்றது. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளரை வரவழைப்பது தொடர்பாக தற்போது வரை தான் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை தேர்தல் ஆணையர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தம்மைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி இக்கோரிக்கையை விடுத்துள்ளதாயினும் இவ்வாறு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வரவழைப்பது தொடர்பாக ஏனைய கட்சிகளுடனும் பேச வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### உருகம்பொலவின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது

முன்னாள் பிரதிக் காவல் மா அதிபர் பிரேமதாச உருகம் பொலவின் குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டை அமெரிக்க நீதிபதியொருவர் நிராகரித்துள்ளார்.

உருகம்பொலவை அமெரிக்காவில் வாழவைக்க அவரது குடும்பத்தார் மேற்கொண்ட இரண்டாவது முயற்சியும் நிறைவேறாமல் போயுள்ளது. 1980 களில் நடைபெற்ற இரண்டாவது ஜே.வி.பி கிளரச்சியை அடக்கியதில் உருகம்பொல பெரும் பங்காற்றியிருந்தார். 1995ல் அவரது மனைவி அமெரிக்காவில் வசிக்கும் உரிமையைப் பெற்று 2012ல் அமெரிக்க குடியுரிமையையும் பெற்றுள்ளார். அவர்களது நான்கு குழந்தைகளும் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுள்ளனர். ஜே.வி.பி கலவரத்தில் கொல்லப்பட்டவர் தொடர்பாக உருகம்பொலவின் பங்கு என்ன என்பதாலேயே அவரது விசா கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

### பொறுமையாகவும் நம்பிக்கையுடனும் ஐ.நாவுடன் தொடர்பு பெறுங்கள் பான் கி மூன்



ஐ.நா வுடனும் அதன் மனித உரிமை ஆணையகத்துடனும் நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் இணைந்து ஒழுகுமாறு இலங்கையை ஐ.நா வலியுறுத்தியுள்ளது. இலங்கையின் சனாதிபதி தலைமையிலான குழுவினர் நியூயோர்க் நகரில் பான் கீ மூனைச் சந்தித்த போதே இக் கருத்தை மூன் வெளியிட்டுள்ளார்.

இலங்கை சர்வதேச விசாரணைப் பொறிமுறையை எதிர்ப்பதன் ஊடாக மனித உரிமை ஆணையகத்துடன் முரண்பட்டுள்ளது. இதனையடுத்து பல நாடுகள் இலங்கை இவ்வாறு முரண்படக் கூடாது எனக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐ.நாவின் செயலாளர் இலங்கையின் மனித உரிமை விடயத்திற்கும் அடுத்த படியாக கடந்த ஜூன் நடைபெற்ற மத வன்முறைச் சம்பவம் தொடர்பாகவும் தனது கரிசனையை வெளியிட்டதுடன் சனாதிபதியின் தலைமைத்துவம் சிறுபான்மைச் சமூகங்களை [illegible] கணக்கி லெடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

### காணாமற் போனோர் ஆணைக்குழு மறுப்பு

கிளிநொச்சியில் நடைபெற்ற காணாமற் போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வில் மொழிப் பிரச்சனையால் மொழிபெயர்ப்பாளரினால் தவறுகள் விடப்பட்டன என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஆணைக்குழு அவ்வாறான பிரச்சினைகள் எவையும் எழவில்லை' எனத் தெரிவித்துள்ளது. "எனது மொழி பெயர்ப்பாளர்களுள் ஒருவர் இளைப்பாறிய பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளராகும். மற்றையவர் சட்ட உதவி ஆணைக்குழுவைச் சேர்ந்தவர். அவர்கள் இருவரும் சில சொற்களை மொழி பெயர்க்கவில்லை எனினும் அச்சொற்கள் மொழிபெயர்க்கப் படாமையால் பாரிய தாக்கம் ஏதம் நிகழாது" என ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பத்திரன தெரிவித்துள்ளார். "காலையிலிருந்து மாலை வரை பணியாற்றும் இம் மொழிபெயர்ப்பாளர்களால் சில பிழைகள் விடப்பட்டாலும் அவற்றைப் பெரிதாக ஊதிப் பெருப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் மிகவும் வெளிப்படையாகச் செயற்படுகின்றோம். அதனால் ஏனைய எவ் விடயங்களிலும் எம்மீது குறைகாண முடியாது போவதால் இச் சிறிய விடயத்தைப் பெரிதாக்க முயற்சிகள் நடக்கின்றன" என அவர் மேலும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா கைதும்: தமிழ் தேசியத்துக்கான செய்தியும்

அரசியல் ஆய்வு

தேத்தாமரத்தான்



நிலையற்ற உலகினில் எதுவுமே நிரந்தரம் இல்லை என்பது தமிழ்நாட்டில் ஜெயா அம்மையாரின் கைது எமக்கு எடுத்து விளம்பியுள்ளது. தசாவதாரம் படத்தின் இறுதிக்கட்டத்தில் கமல் குறிப்பிடுவது போல எங்கோ பறக்கும் ஒரு வண்ணத்து பூச்சியின் அசைவு சுனாமியை உருவாக்க கூடியது என்ற தத்துவத்தின் பிரதிபலிப்பை தமிழ்தேசியமானது அம்மையாரின் கைதினால் எதிர்கொள்ளவுள்ளதா? அதற்கான சாத்தியப்பாடுகள் என்ன என்பதை ஆராய்வதே இந்த பத்தியின் நோக்கம்.

தமிழ்நாட்டின் அரசியலை பொறுத்தவரை 1960 காலப்பகுதிகளில் முளைவிட்ட பெரியார்சிந்தனைகள், சுயமரியாதை கோட்பாடுகள் மற்றும் திராவிடவாதம் போன்றவற்றின் அடிப்படையிலேயே அரசியல் கட்சிகள் இயங்குகின்றன. அவற்றுக்கே மக்கள் பரந்துபட்டளவில் ஆதரவு நிறைந்து காணப்படுகிறது (தி.மு.க, அ.தி.மு.க, தே.தி.மு.க, ம.தி.மு.க போன்றவை). 1980 மற்றும் 1990 பகுதிகளில் முளைவிட்ட பாட்டாளி மக்கள் கட்சி போன்ற சாதியம் சார் கட்சிகள் இன்றளவும் மக்களினால் அங்கீகரிக்கப்படாமையின் தாற்பரியங்களை ஆராயும் ஒருவருக்கு தமிழ்நாட்டின் அரசியல் செல்நெறியின் சித்தாந்த மூலவிசையின் ஆணிவேர் எங்குள்ளது என்பதை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். மறுபுறத்தே தமிழ் நாடானது 1960 காலப்பகுதிகளிலிருந்தே தேசிய அரசியலிலிருந்து தன்னை ஒதுக்கி வைத்து கொண்ட மாநிலமாகவே உள்ளது. தேசிய கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க என்பவை மாநில கட்சிகளின் தயவின்றி ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் பெறமுடியாத நிலை காணப்படுவது தமிழகத்தின் சிறப்பம்சமாகும். தமிழகத்தின் தேசிய புறக்கணிப்பு செல்நெறியின் மற்றுமிரு அம்சங்களாக தனித்தமிழ்நாட்டு கோரிக்கையும் பார்ப்பன எதிர்ப்பு அரசியலும் காணப்பட்டன. காலப்போக்கில் தனித்தமிழ்நாடு கோரிக்கை வலுவிழந்து போனாலும் பார்ப்பன எதிர்ப்பு என்பது இன்னும் நீறு பூத்த நெருப்பாக உள்ளது என்பதற்கு ஆதாரமாக சுப்பிரமணியசாமி போன்றவர்களின் திராவிட மற்றும் தமிழ் தேசிய எதிர்ப்பு அரசியலும் தமிழக கட்சிகளின் அவற்றுக்கான எதிர்வினைகளும் உள்ளன.

இனி ஜெயா அவர்களின் அரசியல் பாதையை நாம் எடுத்து நோக்கினால் அவர் தனது அரசியல் குரு எம்.ஜி.ஆர் போல ஈழத்துடன் நெருங்கிய உறவுகளை பேணியவரல்ல. தாமரை இலை நீர் போன்ற அவரின் ஈழம் தொடர்பான கொள்கைகள் ராஜிவ் காந்தி அவர்களின் கொலையுடன் சுட்டமண்ணும் பச்சை மண்ணுமாய் மாறிப்போனது. அடிப்படையிலேயே பிராமண குடும்பத்தவரான அவரின் கொள்கைகள் ராஜீவ் கொலையின் பின்னணியில் பார்ப்பனம் சார் அரசியலுடன் ஒரு சமரசத்துக்கு வந்தன. இந்த பின்னணியிலேயே அவர் சுப்பிரமணியசாமி மற்றும் சோ போன்றவர்களுடன் நெருங்கிய உறவினை பேண முனைந்தார். ராஜீவ் கொலையின் பின்னர் அவரின் அரசியல் முன்னெடுப்புக்கள் தன்னை ஒரு தீவிர ஈழ எதிர்ப்புவாதியாக முன்னிலைப்படுத்துவதிலேயே குவியம் பெற்றன.

காலம் அவருக்கான சுருக்கு கயிறை வாஜ்பாய் ஆட்சி கவிழ்ப்புக்குள் வைத்திருந்தது போலும். அதுவரை நெருக்கமாயிருந்த சுப்பிரமணியம்சாமி- ஜெயா உறவுகள் அதன் பின்னர் கசந்து போனது. இந்த பின்னணியிலேயே சுவாமி ஜெயாவுக்கு எதிரான சொத்து குவிப்பு வழக்கினை தாக்கல் செய்ததுடன் அதன் தீர்ப்பு வெளிவந்து சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்து விட்டது. தவறு செய்தவர் தண்டனை பெற வேண்டும் என்ற உலக நியதிக்கு அப்பால் இந்த தண்டனையின் பின்னுள்ள நுண்ணிய அரசியலை ஆராய வேண்டும்.

முதலில் சுப்பிரமணிய சுவாமியை இன்றுவரை அரசியல் கோமாளியாக காட்டும் ஈழத்தின் பழுத்த அரசியல்வாதிகளும் தமிழ் ஊடகங்களும் இந்த தீர்ப்பின் மூலம் அவரின் ஆளுமையை புரிந்து கொள்வர் என நினைக்கிறேன். ஒருவர் நமக்கு பிடிக்காதவர் என்பதற்காக அவரின் திறமையை குறைத்து மதிப்பிட முடியாது. எல்லாமே நமக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்ற நமது அதிதீவிர நம்பிக்கைதான் நம்மை இன்று ஒரு அரசியல் வெறுமைக்குள் தள்ளியுள்ளது என்பதை உணரமறுக்கும் மூடமனிதர்களாகவே அவர்கள் இன்னும் உள்ளதோடு எம்மையும் அந்த சித்தாந்தங்களை ஏற்குமாறு வலியுறுத்துகின்றனர். அவர்களுக்கு பிடிக்காத மேலும் இரண்டு செய்திகளும் என்னிடமுண்டு. இப்போது அவருக்கு வி.ஐ.பி பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதும் மத்திய அரசுடனான அவரின் நெருக்கத்தின் உச்ச விளைவே இந்த தீர்ப்பு என்பதுமாகும் .

இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியும் அது நமக்கு வழங்கும் செய்திகளையும் நுணுக்கமாக புரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும். கடந்த ஆட்சியே ஜெயாவுடன் மிகுந்த மோதல் நடத்தி வந்த ஆட்சியாகும். காங்கிரஸ் நினைத்திருப்பின் இந்த வழக்கினை துரிதப்படுத்தி தீர்ப்பினை எப்போதோ வழங்கியிருக்க முடியும். உதாரணம் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் தீர்ப்பு. ஆனால் அப்படி நடக்காமல் புதிய ஆட்சியில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதே இத்தீர்ப்பின் பின்னுள்ள நுண்ணிய அரசியலை ஆராய தூண்டுவதோடு எதிர்காலத்து திருப்பங்களையும் ஊகிக்க தூண்டுகிறது.

உண்மையிலேயே மோடிக்கும் ஜெயாவுக்குமான நெருக்கம் இந்திய அரசியலிலேயே மிகவும் சிலாகிக்கப்பட்ட விடயமாகும். இருவரினதும் வளைந்து கொடுக்காத தன்மையும் ஒற்றை பிடிவாத போக்குகளும் ஒரு தேர்தல் கூட்டணியை உருவாக்க கூடிய சாத்தியங்களை கொண்டிருந்தன. ஆனாலும் அம்மையாரின் பிரதமர் கனவோ அல்லது தொங்குபாராளுமன்றம் அமையும் போது ஆதரவு கொடுத்து மத்திய அரசினை ஆட்டுவிக்கலாம் என்ற பேராசையோ அப்படி ஒரு தேர்தல் கூட்டு அமைவதை தடுத்து விட்டது.

தேர்தலுக்கு பிந்தைய அரசியல் கணிப்பை ஆளும் பா.ஜ.க செய்தபோது அது இன்னும் வளர முடியாத மாநிலங்களாக அடையாளம் கண்டு கொண்டவற்றில் தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்கம் ஆகிய மூன்று முக்கிய பெரிய மாநிலங்களும் அடங்குகின்றன. இந்த கணிப்பை முன்னிறுத்தி இந்த வழக்கு தீர்ப்பின் முன்னர் நடை பெற்ற மூன்று முக்கிய சம்பவங்களை பார்ப்போம். முதலாவதாக தமிழக பா.ஜ.க தலைவர்ராக இயங்கு திறன் கைவரப்பெற்ற தமிழிசை சௌந்தரராஜன் நியமிக்கப்பட்டமை. அடுத்து சாமி அவர்கள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாக பிரதமரிடம் அறிக்கை கொடுத்தமை. இறுதியாக பாரதிய ஜனதாவின் நதிமூலமாக கருதப்படும் ஆர்.எஸ்.எஸ் தலைவர் அவர்கள் தமிழகம், கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் ஜிகாதிகளின் செயற்பாடு கூடி விட்டதாக அறிக்கை இட்டமை.

மேற்கூறிய மூன்று சம்பவங்களையும் நாம் எதேச்சையாக நடந்தது என்று ஒதுக்க முடியாமைக்கு காரணம் தீர்ப்பின் பின் ஆளும் கட்சியினர் நடந்து கொள்ளும் விதமாகும். முதலாவதாக தமிழிசை மற்றும் பொன்.ராதாகிருஸ்ணன் போன்ற தலைவர்கள் இந்த தீர்ப்பினை ஆதரித்து அறிக்கை வெளியிட்டமை. அடுத்து தமிழத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாக கூறி 355 சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை. திரு.ரஜனிகாந்த் அவர்களை ஆளும் கட்சிக்குள் இழுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள். இது போன்ற சம்பவங்கள்தான் இது ஒரு திட்டமிட்ட சதி போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றன.

உண்மையிலேயே எல்லோருடைய எதிர்பார்ப்புக்கும் மாறாக தீர்ப்பின் பின்னர் ஜெயா அம்மையாருக்கான ஆதரவு அதிகரித்துள்ளது. ஆனால் தேர்தல் ஒன்று வருகையில் நிலைமை எவ்வாறு மாறும் எனக்கூறமுடியாது. ஏனெனில் அ.தி.மு.க வில் இரண்டாம் கட்ட தலைமை என்று ஒன்று கிடையாது. அம்மாவே எல்லாம். இதுவே அடுத்த தேர்தலில் அந்த கட்சிக்கு பாதகத்தை ஏற்படுத்தும். பதவி போட்டி காரணமாக கட்சியும் பிளவுபடக்கூடிய சாத்தியங்களையும் மறுக்கவியலாது. மறுபுறத்தே தி.மு.க இன்னும் எழுச்சி பெறவில்லை. இதற்கு மாற்றீடாக உதிரி கட்சிகளின் உதவியுடன் பா.ஜ.க ரஜனியை முதல்வராக அறிவித்து களம்கண்டால் தேசிய கட்சி ஒன்று மீண்டும் தமிழ்நாட்டு ஆட்சிக்கட்டிலை பிடிக்க கூடிய சாத்தியங்களை மறுக்க முடியாது. ஏனெனில் அரசியல் செல்நெறிகள் எப்போதும் நமது கணிப்புக்களுக்கு அப்பாற்பட்டவையே.

2009 இன் முன்னர் தன்னை ஒரு பார்ப்பனவாதியாக காட்டி வந்த ஜெயா அவர்கள் அதன் பின்னான கால கட்ட பகுதிகளில் தன்னை மீண்டும் ஒரு திராவிடவாதியாக முன்னிலைப்படுத்துவதில் ஆர்வம் காட்டினர். அவரின் ஈழம் தொடர்பான அணுகுமுறைகள் தமிழீழத்துக்கான வாக்கெடுப்புக்களில் தொடங்கி இலங்கை அரசை குற்றவாளி கூண்டில் நிறுத்துவது வரை நீண்டது. இது போதாமல் மீனவர் பிரச்சினை தொடர்பிலும் தொடர்ந்து பிரதமருக்கு கடிதம் எழுதி நச்சரிப்பவராகவே காணப்பட்டது. எல்லாவற்றையும் விட ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளிகளை விடுவிக்க கோரி தனது சம்மதத்தையும் தெரிவித்தார். இது போன்ற நடவடிக்கைகள் அவரை தமிழர்களின் மீட்பராக காடியதுடன் அரசியல் செல்வாக்கையும் உயர்த்தியது. புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் அவருடன் நெருக்கத்தை காட்ட ஆரம்பித்தன. அவரின் அரசியல் செல்வாக்கின் தேயாத அடையாளமாக கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் அவரின் கட்சிக்கான மாபெரும் வெற்றி உணர்த்தியது.

சரி இனி ஏன் இந்திய ஆளும் வர்க்கம் ஆபத்து மிகுந்தவராக அவரை கணித்தது எனப்பார்க்கலாம். இப்போதைக்கு இந்தியாவில் சோனியா மற்றும் ராகுல் போன்றவர்களை விட பா.ஜ.க வுக்கு சவால் மிக்க தலைவர் ஜெயா அவர்கள்தான். அவரின் மங்காத செல்வாக்கு பா.ஜ.க வினை மாநில அளவில் வளர விடாது. அடுத்த தேர்தலிலும் அவரே [illegible] சூழலும் காணப்பட்டது. அடுத்து அவர் தமிழகத்தின் அசைக்க முடியாத தலைவராக வளர்வது தனித்தமிழ்நாட்டு கோரிக்கையை வலுப்படுத்தலாம். இப்போதே அமைச்சரவையில் புறக்கணிப்பு, மீனவர் பிரச்சினையில் மெத்தனம் போன்ற விடயங்களால் தமிழ்நாட்டில் தனித்தமிழ்நாடு கோரிக்கையை மெல்ல வலுப்பெற்று வருகின்றது. இது ஏனைய மாநிலங்களுக்கும் பரவினால் இந்திய ஒருமைப்பாடு கேள்விகுறிக்குள்ளாகும். மறுபுறத்தே மோடியின் நூறுநாள் ஆட்சி திருப்தி தரவில்லை என்றே கணிப்புகளும் இடைதேர்தல் முடிவுகளும் கூறுகின்றன. இப்படியே தொடர்ந்தால் அடுத்த தேர்தலில் ஆளும்கட்சியின் ஆட்சிகனவு முடக்கப்பட்டு விடலாம். அந்தகட்டத்தில் மூன்றாவது அணி அமைந்து ஜெயலலிதா அந்த கூட்டணிக்கு தலைமை வகிப்பின் அவரின் பிரதமர் கனவும் சாத்தியமாகலாம். இவற்றை எல்லாம் உணர்ந்தும் அவற்றை தடுப்பது மற்றும் தமிழ்நாட்டில் வேரூன்றுவதற்கான நடவடிக்கையாகவே இந்த தீர்ப்பு வெளியாகி உள்ளது என்பது முற்றிலும் மறுக்கப்படமுடியாதது.

மத்திய அரசும் மாநில அரசும் முதன் முதலில் மோதிக்கொண்ட சம்பவம் ராஜிவ்காந்தி கொலை வழக்கு தீர்ப்பின் போதான வாதத்திலாகும். இதில் மாநில அரசு குற்றவாளிகளை விடுவிக்க கோரி உயர்நீதிமன்றத்துக்கு மனுவளிக்க மத்திய அரசு அதை எதிர்த்து வாதாடி வெற்றி கண்டது. இது எதனை காட்டியது எனில் இன்னும் ஈழப்பிரச்சினை தமிழ்நாட்டின் எல்லை தாண்டி இந்திய அளவில் பேசுபொருளாகவில்லை என்பதையும் ஆட்சிகள் மாறினாலும் கொள்கைகள் மாறவில்லை என்பதையுமே. ஒருவகையில் இது மத்திய அரசின் ஆழம் பார்க்கும் நடவடிக்கையாகவே காணப்பட்டது. இந்தியாவின் தென்கோடியில் தனக்கு சவாலான ஒரு தலைவர் உருவாவதை ஆளும் பா.ஜ.க ரசித்திருக்காது என்பது மட்டும் திண்ணம்.

அடுத்து நமது விடயத்துக்கு வருவோம். உண்மையிலேயே நமது தமிழ்தேசிய அரசியல்வாதிகள் நமது விடயத்தில் காதில் பூ சுற்றுவதையே மேற்கொண்டுள்ளனர். கிராமிய தமிழில் நான் கூறுவதாயின் பேய்க்காட்டுகிறார்கள் நம்மை. ஏனெனில் இவர்களின் இந்திய விஜயத்தின் பின்னரும் அங்கிருந்து நமக்கு சாதகமான சமிக்ஞைகள் எதுவும் இல்லை. மாறாக இந்திய அரசும் கொழும்பும் இணைந்து போகும் போக்குகளே அரசியலில் நீக்கமற நிறைந்து காணப்படுகிறது. இவர்களின் அதிமேதாவித்தனப் போக்குகளினால் முதல்வர் ஜெயலலிதாவை முதலில் சந்திக்காமல் மோடியை சந்திக்க போனமை தமிழ்நாட்டு தமிழர்களின் மனதில் ஒரு



நெருடலை ஏற்படுத்திதான் இருக்கும். அதனால்தான் ஜெயா அவர்கள் இவர்களை சந்திக்க மறுத்தார்கள். எல்லாம் முடிந்த பின்னரும் பிரதமருடன் பேசியதை வெளியிட முடியாதாம். உண்மையிலேயே அங்கு மோடி இவர்களை எச்சரித்து அனுப்பியுள்ளதாயே நாம் கருதவேண்டியுள்ளது திரு.சாமி அவர்கள் கூறுவது போல.

வெளிப்படையாக சொல்லின் இந்த ஆட்சியானது காங்கிரஸ் ஆட்சியை விட ஈழத்தமிழருக்கு பாதகமான ஆட்சியே. கொழும்பு அரசுக்கும் டில்லி அரசுக்கும் சித்தாந்த அடிப்படையில் நிறைய ஒற்றுமை உண்டு. அவர்கள் இந்துவாதத்தையும் இவர்கள் பௌத்தவாதத்தையும் முன்னிலைபடுத்துகின்றனர். புதிய ஆட்சியில் இஸ்லாமியர்களுக்கான எதிர்ப்பு இந்தியாவில் வலுத்து வருவதை அண்மைய உத்தர பிரதேச இடைத்தேர்தலில் நாம் கண்டோம். ஆனாலும் அங்கு ஆளும் கட்சி தோற்றது வேறு கதை. மோடி அவர்களின் மீதான கோத்ரா ரயில் எரிப்பு சம்பவங்களின் வடு இன்னும் ஆறவில்லை. உண்மையில் இந்திய புதிய அரசும் சிறுபான்மை இனக்குழுமங்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுக்காமையை ஐ.நா சபையில் மோடி அவர்களின் காஸ்மீர் விடயம் இந்தியாவின் சொந்த விடயம் என்று கூறியது எடுத்துக்காட்டியது. இதெல்லாம் விடுத்து ஈழத்தமிழரும் இந்துக்களே எனவே இந்துக்களை இந்திய அரசு பாதுகாக்கும் என் யாராவது கனவு கண்டால் அது மாயையே.

இறுதியாக கூறின் ஜெயா கைது என்பது தமிழ்நாட்டுக்கும் ஈழத் தமிழருக்கும் இடையிலான இடைவெளியை ஏற்படுத்தி உள்ளது என்பதே உண்மை. இப்போதைய புதிய அரசின் அத்தனை நடவடிக்கைகளும் அம்மாவின் விடுதலை குறித்தே இருக்கும். இந்த இடைவெளியில் ஈழத்தமிழர்கள் மறக்கப்பட்டு விடுவர். இதெல்லாம் தாண்டி அடுத்த மாநில தேர்தலில் பா.ஜ.க தமிழகத்தின் ஆட்சியை பிடிப்பின் சுப்பிரமணிய சுவாமிகளின் ஈழத்தையும் தமிழ்நாட்டையும் தமிழர் பிரச்சினையில் பிரிக்க வேண்டுமென்பது சாத்தியமாக கூடும். இதுவே தமிழ் தேசியத்துக்கான செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பும் மறத்தலும் மனிதனுக்கான கொடை

...நாட்டு நடப்பு...

பல்கலைக்கழக பரீட்சை முடிவின் பின் தம் எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு எடுப்பது சகல பல்கலைக்கழக மாணவர்களின் வழமையான செயற்பாடாகும். அதன்படி பழனிக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. தாயின் கடும் சுகயீனம் காரணமாக படிப்பில் தேவையான கவனத்தை செலுத்தாததினால் குறித்த பரீட்சையில் நல்ல தேர்வை பெற்றுக் கொள்ள தவறிவிட்டான்.

எப்படியும் மருதானை தொழிநுட்ப கல்லூரியில் சேர்ந்து அங்கு கல்வியை முன்னெடுத்துச் சென்றான். அவனது சொந்த ஊர் இரத்தினபுரி. அங்கு இருந்து நிதமும் மருதானைக்கு போக்குவரத்து செய்வது மிக கஷ்டமான காரியம் மாத்திரமல்ல வீண் பண விரயமும் கூட.

அதனால் வெயாங்கொடையிலுள்ள அவனது பெரியப்பாவின் வீட்டில் தங்கிக் கொண்டு கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டான். மருதானை தொடரூந்து நிலையத்தில் சகல தொடரூந்துகளும் நிறுத்தப்படுவதால் அவனுக்கு போக்குவரத்தில் எந்தவித பிரச்சினைகளும் எழவில்லை.

தொழிநுட்ப கல்லூரியில் பெறும் கல்வியை கொண்டு நல்லதொரு தொழிலை பெற்றுக் கொள்வதே அவனது முக்கிய நோக்கம். அதனால் தனது படிப்பில் அவன் மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டான். நிதமும் வெயாங்கொடையிலிருந்து தொடரூந்திலே மருதானை நோக்கிச் செல்வான்.

அந்த தொடரூந்து பயணத்தினூடாக பல நண்பர்களை புதிது புதிதாக சேகரித்துக் கொண்டான். நண்பர்களை மாத்திரமல்ல நாளாந்த பயணிகள், அங்காடி வியாபாரிகள் மற்றும் நிறுவனங்களில் தொழில் புரிபவர்கள் அனைவரினது முகங்களும் அவனுக்கு பரீட்சையமாயின.

நம் நாட்டில் இன்று அமைதியான சூழல் நிலவுவதாலும் குறிப்பாக தமிழ் வா்லிபர்கள் எங்கேயும், எப்போதும் பீதியற்ற நிலையில் போக்குவரத்து செய்ய முடியுமென்பதாலும் பழனி எவ்வித தொந்தரவுகளும் இன்றி நாளாந்த தொடரூந்து பயணத்தை மேற்கொண்டு வந்தான்.



அவ்வாறு நாளாந்தம் தொடரூந்தில் பயணிக்கும் போது ஒரு நாள் கீரைக் கூடையுடன் ஒரு பெண் இறாகம தொடரூந்து நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை செல்ல அங்கு வந்து நின்ற தொடரூந்தொன்றில் ஏறினாள். பழனி மிகவும் இரக்க சுவாசம் கொண்டவனாக இருந்ததினால் அவளின் கீரைக் கூடையை அதில் ஏற்றுவதற்கும், அவள் படிக்கட்டிலிருந்து மேலே ஏறி உள்ளே செல்லவும் உதவி செய்தது மாத்திரமல்ல தனது ஆசனத்தைக் கூட அவளுக்கு கொடுத்துவிட்டு அவன் நின்று கொண்டே அன்று பயணித்தான்.

"தம்பி இந்த கீரைக் கூடையை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். நான் கென்ரீனில் ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா? என்று பார்த்துவிட்டு வாறன்" என்று கூறிவிட்டு தொடரூந்துக்குள் இருக்கும் சிற்றூண்டிச் சாலைப் பக்கம் போனாள் அந்தப் பெண்.

அவள் வரும்வரை அவள் உட்கார்ந்திருந்த ஆசனத்தில் பழனி உட்கார்ந்து கொண்டான். இல்லாவிட்டால் வேறு யாரும் அதில் உட்கார்ந்து விடுவார்கள் என்பதை தடுக்கவே அவன் அதில் உட்கார்ந்து கொண்டான். வெகு நேரமாகியும் அவள் திரும்பி வரவில்லை. அதற்குள் டிக்கட் பரிசோதகர்கள் வந்து விட்டார்கள்.

இது யாருடைய கூடை? என்று அவர்கள் அவனிடம் விசாரிக்கவே, அவன் நடந்ததைக் கூறினான். ஆனால் அவர்கள் அவனை விட்டு வைக்கவில்லை. அவன் மேல் சந்தேகம் கொண்டு, அவ்விடத்திற்கு பொலிசாரை வரவழைத்தனர். அந்த கீரைக் கூடையுடன் அவன் கைது செய்யப்பட்டு மருதானை நீதிமன்றம் முன் நிறுத்தப்பட்டான். நீதவான் அவனை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்க உத்தரவு இட்டிருந்தார்.

எப்படியோ அவன் கைது செய்யப்பட்ட விடயம் தெரிந்து, வெயாங்கொடையிலுள்ள அவனது பெரியப்பா அவனை பிணையில் வெளியில் எடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

அவன் பிணையில் வெளியில் வந்தாலும் உரிய குற்றத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு மாதா மாதம் செல்ல வேண்டியிருந்தது. அதனால் அவனது தொழிநுட்ப கல்லூரியின் கற்கை நெறிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு அந்த நிறுவனத்தின் பொறுப்பதிகாரிகள் அவனுக்கு உதவினர்.

உண்மையில் பழனியின் நடத்தை பற்றி அங்குள்ளவர்களுக்கு நன்கு தெரியும். அவனிடம் எந்தவித தீய பழக்கங்களும் இல்லாமல் இருந்ததால் கல்லூரியின் அதிகாரிகள் அவனுக்கு உதவ முன்வந்தனர். இருப்பினும் அந்த கீரை விற்கும் பெண் மீது மிகவும் கோபமாக இருந்தான் பழனி.

மனிதாபிமான அடிப்படையில் அப்பெண்ணுக்கு உதவப் போனதாலே அவன் தேவையற்ற பிரச்சினைக்குள் சிக்கிக் கொண்டான். அவனது வெயாங்கொடை பெரியப்பா ஓர் ஓய்வு பெற்ற தொடரூந்து நிலைய அதிபர். அவ்விதமான சம்பவங்கள் போக்குவரத்துக்களில் இடம்பெறுவது சகஜம். ஆனால் அதே வேளை மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், என்றுமே அறிமுகம் இல்லாதவர்களுக்கு உதவி செய்யவே கூடாது என்றும் அவனுக்கு பல அறிவுரைகளை வழங்கினார் பெரியப்பா.

அன்று அவனது கஷ்டகாலம் என்னவோ அவ்விதமான ஒரு தேவையற்ற சிக்கலை ஏற்படுத்திவிட்டது. ஆனாலும் அந்த பெண் மீதுள்ள கோபம் அவனுக்கு தணிந்தபாடில்லை. எப்படியும் அவளை பழிவாங்கும் நோக்கத்துடனே பொழுதை கழித்தான். அவன் எங்கு பயணித்தாலும் கீரை விற்கும் பெண்கள் உட்பட அனைத்து அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் சகல பெண்களையும் அவதானிக்க தவறுவதில்லை.

ஒரு ஜென்ம எதிரி அவ்விதமான ஒரு சூழ்ச்சியை செய்திருந்தால் அவன் பொறுத்து இருந்திருப்பான். ஆனால் முன்பின் தெரியாத, அதுவும் ஒரு அங்காடிப் பெண் தனக்கு அவ்விதமான கேவலத்தை புரிந்ததையிட்டு அவன் இரவும் பகலும் தனக்குள்ளே நொந்து கொண்டான். அவனே ஓர் அப்பாவி அவனுக்கா இப்படியொரு சூழ்ச்சியான தண்டனை?. கல்லூரி படிப்பில் கவனம் செலுத்துவதா? வழக்கின் தீர்ப்பைப் பற்றி சிந்திப்பதா? எல்லாம் அவனுக்கு பெரும் குழப்பமாக இருந்தது. அவனது வெயாங்கொடை பெரியப்பா மருதானையிலுள்ள பிரபல சட்டத்தரணியின் உதவியுடன் குறித்த வழக்கிலிருந்து நிரபராதி எனும் தீர்ப்பை அவனுக்கு பெற்றுக் கொடுத்திருந்தார். சந்தர்ப்பமும், சூழ்நிலையுமே சிலரே தேவையற்ற குற்றங்களுக்கு உள்ளாக்குகின்றதை மன்றம் ஏற்று அவனை வழக்கிலிருந்து விடுவித்திருந்தது!.

ஆனால் அவன் மேல் சுமத்தப்பட்ட அக்குற்றச்சாட்டு மிக கடுமையான தண்டனையை பெற்றுக் கொடுக்கக் கூடிய குற்றச்சாட்டாக இருந்தமைக்கு காரணம் குற்றத்திற்கு ஆதாரமான தடயப் பொருள் மன்றுக்கு பொலிசாரால் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததே. சுமார் ஒரு வருட காலத்தை அவன் அத்தீர்ப்புக்கான செலவழிக்க நேர்ந்ததுமல்லாமல், வீணாக பணமும் விரயமானது.

நம் நாட்டில் பலர் தாம் செய்யாத குற்றத்திற்கு சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில் பலர் ஒன்றுமறியாதவர்கள் போன்று வெளியே உல்லாசமாக சுற்றித் திரிவதை நாம் அறியாமலா என்ன? கூலிக்கு குற்றம் புரிபவர்களை வைத்து சமூகத்தில் பாரிய குற்றங்களை புரிந்து அவர்களையே அக்குற்றங்களுக்காக சிறைக்கு அனுப்பிவிட்டு தம் பெயரை காப்பாற்றிக் கொண்டிருப்பவர்கள் பலர்.

எப்படியோ பழனி தான் செய்யாத குற்றத்திலிருந்து தப்பித்து கொண்டது மாத்திரமல்ல கல்லூரி படிப்பையும் வெற்றிகரமாக்கி சிறந்த பெறு பேறுகளையும் பெற்றுக் கொண்டதால் கொழும்பு சென்ட். அன்தனீஸ் குரூப் நிறுவனத்தில் கைநிறைய சம்பளத்துடன் கௌரவமான தொழிலும் அவனுக்குக் கிடைத்தது.

தற்பொழுது தனது சொந்த ஊரான இரத்தினபுரிக்குச் சென்று தனது பெற்றோருடன் வாழத் தொடங்கினான். அவனது தகப்பன் ஓய்வூதியம் பெறுவதால் அக்குடும்ப பொருளாதாரத்தில் அவ்வளவு பெரிய சிக்கல்கள் இல்லை. அவன் தொழிநுட்ப கல்லூரியில் படிக்கும் காலத்தில் அவனது முழுச் செலவையும் வெயாங்கொடை பெரியப்பாவே ஏற்றிருந்தார். அவரின் பிள்ளைகள் மூவரும் கனடாவில் தொழில் புரிவதால் அவரது வீட்டிலும் எந்தவித பணச்சிக்கலும் இல்லை.



ஒரு வருடத்துக்குள் பழனிக்கு திருமணமும் நடந்தேறிவிட்டது. ஒரு நாள் அவன் தனது மனைவியுடன் வெயாங்கொடை பெரியப்பா வீட்டுக்கு பேரூந்து ஒன்றில் சென்று கொண்டிருந்தான். அவர்கள் வெயாங்கொடை பஸ்தரிப்பு நிலையத்தில் இறங்கிய போது அவன் கண்ட காட்சி அவனை திடீரென கோபமூட்டியது.

அன்று தன்னை சிறை கம்பிகளை எண்ண வைத்த அந்த கீரை விற்கும் பெண் அங்கு வெற்றிலை விற்றுக் கொண்டிருந்தாள். அவள் அவளை கூப்பிடவே அவள் ஒன்றுமறியாதவள் போல் விறுவிறுவென நடந்து கொண்டே முன் சென்றாள். ஆனால் பழனி அவளை விடவேயில்லை. பின் தொடர்ந்து சென்று எப்படியோ அவளை போகவிடாது தடுத்ததுமல்லாமல் அன்று நடந்த சம்பவத்தை அவளுக்கு நினைவூட்டி அவள் கன்னத்தில் அறைவதற்கு கை ஓங்கிய போது அவனின் மனைவி அவனது கையை பிடித்துக் கொண்டதால் அந்தப் பெண் தப்பித்துக் கொண்டாள்.

தான் அன்று வேண்டுமென்று அவனை மாட்டிவிட வில்லையென்றும் வழமையாக அவ்விதமான வியாபாரத்தை தான் செய்துவருவதாகவும் கூறி நடந்த சம்பவத்திற்காக பழனியின் காலைப் பிடித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். நடந்ததெல்லாம் ஒரு கெட்ட கனவாக மறப்போம். இனிமேல் இப்படியான ஆபத்து தரக்கூடிய தொழிலை செய்யாதே. எங்கள் வீட்டு வேலைக்கு ஒரு பெண் தேவை நீ வாறியா?" என்று கேட்கவும் அவள் தனது பரிபூரண சம்மதத்தை தெரிவித்துக் கொண்டாள்.

அன்று அவள் தனது கூடைக்குள், கீரைக்கட்டுகளுக்கு அடியில் பல ஹெரோயின் போதைப்பொருள் பொட்டலங்களை இரகசியமாக வைத்திருந்ததே சகல வில்லங்களுக்கும் காரணமாக இருந்தன.

– பாலையூற்றான் –




## தந்தையின் சாகசம்




பிரித்தானியாவின் கிளாஸ் கோவை சேர்ந்த சைமன் கில்மார்டின் என்ற நபர், டாட் லெனோக்ஸ் என்ற தனது 6 மாத ஆண் குழந்தையை ஒரே கையில் தாங்கி சாகசம் செய்துள்ளனர். பேஸ்புக்கில் பதிவேற்றம் செய்யப்பட்ட இந்த காணொளியை இதுவரை 2 மில்லியன் மக்கள் பார்வையிட்டுள்ளனர். இக்காணொளி இந்த அளவுக்கு பிரபலமாகும் என நான் நினைத்து பார்க்கவில்லை என்றும் இது முட்டாள்தனமாக இருந்தாலும் மகிழ்ச்சியை தருகிறது என தந்தை தெரிவித்துள்ளார்.

## சிவப்பு ஆரஞ்சில் நிலா



ஆரஞ்சு அல்லது சிகப்பு நிறத்தில் தோன்றிய சந்திர கிரகணத்தை உலகமெங்கிலும் உள்ள மக்கள் ஆர்வத்துடன் கண்டு களித்துள்ளனர். இந்தாண்டின் முதல் சந்திர கிரகணம் ஏப்ரல் 15ம் திகதி நிகழ்ந்ததையடுத்து, 08.10.2014 தோன்றிய 2வது சந்திர கிரகணம் அவுஸ்திரேலியா மற்றும் சில தென் அமெரிக்க நாடுகளில் நன்கு தெரிந்துள்ளது. முழு கிரகண சமயத்தில் சந்திரன் ஆரஞ்சு அல்லது சிகப்பு நிறத்தில் தோற்றமளித்தது சந்திரன்.

## தாய்க்கு நேர்ந்த கொடுமை



அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாகாணத்தை சேர்ந்த Kevin Davis என்ற இளைஞன் சரியான நேரத்தில் தூங்காமல், சாப்பிடாமல் எந்நேரமும் வீடியோ கேம் விளையாடிக்கொண்டே இருந்ததால் கோபம் அடைந்த அவருடைய தாய், வீடியோ கேமின் ரிமோட்டை உடைத்தார். இதனால் கடும் ஆத்திரமடைந்த மகன், அருகில் இருந்த சுத்தியலால் தாயின் பின்மண்டையில் ஓங்கி பலமுறை அடித்ததாகவும், இதன் காரணமாக ரத்த வெள்ளத்தில் மிதந்த அந்த தாய் சிறிது நேரத்தில் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து தகவல் அறிந்த போலீஸார் அவனை கைது செய்து விசாரணை செய்ததோடு, கொலை செய்த பின்னர் அவன் தன்னுடைய தாயுடன் செக்ஸ் உறவு கொண்டதாகவும் கூறியதால் போலீஸார் அதிர்ச்சி அடைந்து உடனடியாக அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## ஏன் துன்புறுத்த பெண்கள் கிடைக்கவில்லையோ!!

ஈராக் மற்றும் சிரியா பகுதிகளை இணைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசம் என்ற புதிய நாட்டை உருவாக்கியுள்ளனர். இவர்கள் இளம் பெண்களை கொடூரமாக பாலியல் ரீதியாக துன்புறுத்தி வருகின்றனர். இந்நிலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதி ஒருவர், கழுதையுடன் XXX வைத்துக் கொள்வது போன்ற வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனை ட்ரோன் என்றழைக்கப்படும் ஆளில்லா விமானம் படம் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணுக்கு கிடைத்த அதிஷ்டம்

சீனாவை சேர்ந்த Dai Xingfen என்பவர் கடந்த 21 வருடங்களுக்கு முன்னர் சாலையில் அனாதையாக நின்றிருந்த ஒரு சிறுவனை பார்த்து பரிதாபப்பட்டு, உணவு வாங்கிக்கொடுத்து அவருடைய சொந்த ஊருக்கு செல்ல கையில் கொஞ்சம் பணமும் கொடுத்து அறிவுரையும் கூறி அனுப்பினார்.

Rongfeng என்ற அந்த 17 வயது இளைஞர் தனது சொந்த ஊருக்கு சென்று, அந்த சிறிய அளவு பணத்தை முதலீடாக வைத்து படிப்படியாக முன்னேறி தற்போது சீனாவில் குறிப்பிட்டு சொல்லும்படி பெரிய பணக்காரராக மாறியுள்ளார். தன்னுடைய முன்னேற்றத் திற்கு அடித்தளம் போட்டு கொடுத்த Dai Xingfen அவர்களை பலவருட முயற்சிக்கு பின்னர் தற்போது தேடி கண்டுபிடித்து அவருக்கு ஒரு லட்சம் சீன யான் தொகையை பரிசாக கொடுத்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு


## சிறுகதை

## அவன் அவள்

அப்பா வீட்டிலேயே இருந்தார்கள். அரண்மனைக்குப் போகவில்லை. ஒரு மாசமாகிறது வேலைக்குப் போய். வெளியே போவதே நின்றுபோயிற்று. குளிக்க வேண்டியது, சாப்பிட வேண்டியது, படுத்துத் தூங்குவது, இபபடித்தான் நாள்கள் கழிந்தன.

கல்கி, ஆனந்தவிகடன் படிப்பார்கள், விழித்திருக்கும் சமயங்களில் அப்பா இப்படி இருக்கிறவர்களே இல்லை. எப்பொழுதும் ஓட்டமும் சாட்டமுமாகத்தான் இருப்பார்கள். மடிப்புக் கலையாத பேண்ட்ஷர்ட்தான். தினசரி ஷேவ்தான். அப்பா ஓய்ந்திருந்து பார்க்க முடியாது.

அம்மையிடம்கூடப் பேசுவது குறைந்துபோயிற்று. சாயங்காலம் வாக்கில் கிழக்கேயுள்ள டூரிங் டாக்கீஸ்க்குப் போய் இருந்துவிட்டு வருவார்கள். இவனையும் ரெண்டு மூணு தடவை கூடக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். ஃபர்ஸ்ட்கிளாஸ் சோபாவில் விட்டிருப்பார்கள். இடைவேளையில் தியேட்டர் ஆள் முறுக்கு வாங்கிக்



கொண்டுவந்து கொடுப்பான். பழைய படங்களாகத்தாம் போடுவார்கள். ஆனாலும் கூட்டம் இருக்கும். கண்ணகி, முல்லைவனம், சதாரம், ஆர்யமாலா, ஜெனோவா எல்லாம் இப்படிப் பார்த்தது தாம். அப்பா பெரும்பாலும் மானேஜர் பெரியப்பா ரூமில் இருந்து பேசிக்கொண்டிருப்பார்கள். அப்பா பார்க்காத படம் அபூர்வமாகத்தான் இருக்கும். அப்படி சமயங்களில் கூடவந்து இருப்பார்கள்.

பொதுவாக அப்பா சீக்கிரமே தூங்குகிறது இல்லை. தியேட்டரிலிருந்து வரவே பத்து மணியாகிவிடும். அப்பா வீட்டுக்கு வருவதே இவனுக்குத் தெரியாது. தூங்கிவிட்டிருப்பான். இவனைக் கூட்டிக்கொண்டு போயிருந்தால் மட்டும்நேரத்துக்கு வருவார்கள். ரயில்வே ஸ்டேஷன் பக்கம் இருக்கும் பெட்டிக்கடையில் பழம், கோல்ட்ஃப்ளேக் சிகரெட் வாங்கிக் கொள்வார்கள். சோடா குடித்துவிட்டு வெற்றிலை போட்டுக் கொள்வார்கள்.

எப்படியோ விஷயம் தெரிந்து சங்கரன் மாமா வந்திருந்தான். மத்தியானம் போல வந்தவன் சாயங்காலம் வரைக்கும் இருந்தான். அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை, அக்காவும் இவனும் வீட்டில் இருந்தார்கள். "எப்படில இருக்க" என்று அக்காவை அன்போடு விசாரித்தான். "மருமகப்புள்ள எங்கூட வர்றியாடே" என்று இவனிடம் கேட்டான்.

புறப்பட்டுப்போகும்போது கலங்கிய குரலில் அம்மையிடம் சொல்லிக்கொண்டான். "அத்தானை பத்திக் கவலைப்படாதே அக்கா. சரியாயிருவாக. சனியன் போய்த் தொலைஞ்சுதுல்ல, இனிமே என்ன. நல்லகாலம்தான்" என்றவன், அப்பாவைப் பார்த்து, "அரண்மனை வேலைய மட்டும் விட்டுராதீங்க, அத்தான். அக்காவும் பிள்ளையளும் பாவம். பாத்துக்கிடுங்க, வரட்டுமா" என்று சொல்லிவிட்டுப் போனான்.

இடையில் ஒருநாள் ராஜா வந்திருந்து பார்த்துவிட்டுப் போனார்கள். அம்பாசமுத்ரம் டாக்டரை அனுப்பி வைத்தார்கள். "என்னவும் வேணும்னா சொல்லியனுப்புங்க. நல்லா ரெஸ்ட் எடுத்துக்குங்க. மெதுவா வரலாம் அரண்மனைக்கு., உடம்பப் பார்த்துகிடுங்க. மனசத் தளர விட்டுராதீங்க. நாங்கள்லாம் இருக்கோம் எது ஒண்ணுக்கும்" என்று அப்பவின் கையைப் பிடித்துச் சொல்லிவிட்டுப் போனார்கள். கூச்சத்தில் அப்பாவுக்குப் பேசத் தோன்றவில்லை. முறுவலித்தபடி இருந்துகொண்டார்கள்.

அம்மாதான் இடையிடையே கேட்டுக் கொண்டிருப்பாள்.

"அரண்மனைக்கு எப்ப போக."

"போணும் லட்சுமி" என்று மட்டும் சொல்வார்கள் அப்பா.

இராமலிங்கம்பிள்ளை பெரியப்பா ஒருநாள் காலையில் வந்திருந்தார்கள். ஒரு டஜன் சாத்துக்குடியைப் பையோடு அம்மாவிடம் கொடுத்துவிட்டு, "நீ தைரியமா இரும்மா. அழகுக்கு ஒண்ணுமில்ல. அவன் இன்னும் ஒரு வாரம், பத்து நாள்லேயே பழைய மாதிரி ஆயிருவான். அரண்மனைக்கும் போக ஆரம்பிச்சுருவான்" என்று ஆறுதல் சொன்னார்கள்.

"உனக்கு நல்ல காலம் வந்திருச்சுப்பா. அவ ஓடிப்போலேன்னா நீ விடுவியாக்கும். பிள்ளையள் வளந்திட்டு வருதுப்பா. எல்லாத்தையும் தொலைச்சுட்ட. வேலையக் காப்பாத்திக்கோ. ராஜாவ விட்டுராதடே. இதுவும் இல்லேன்னா ஒரு பய மதிக்க மாட்டான், பாத்துக்கோ. இனிமேயாவது புத்தியா பிழைக்கணும். அவ்வளவு தான் சொல்ல முடியும். வரட்டுமா. அடுத்த வாரம் புளியறை போகையில வந்து பாக்கறேன்" என்று புறப்பட்டுப் போனார்கள்.

அப்பா எப்பொழுதும்போல காலையில் எழுந்து குளித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், இவனைக் கூப்பிட்டு, "அப்பா ஒரு லெட்டர் எழுதித் தர்றேன். அரண்மனைக்குப் போயி ராஜாவப் பாத்துக் கொடுத்திட்டு வந்திர்றியா" என்று கேட்டார்கள்.

"நா ஒத்தையில் எப்படிப் போவேன்" என்று தயக்கத்துடன் சொன்னான் இவன்.

கேட்டுக்கொண்டிருந்த அம்மை சொன்னாள்: போலாம். எப்ப இதெல்லாம் தெரிஞ்சுக்கிட. பொஸ்தகத்தைப் படிச்சிக்சிட்டே இருந்தா போதுமா. எல்லாம் தெரிஞ்சு வச்சுக்கணும்.

அப்பா இதைக் கேட்டு லேசாக சிரித்துக் கொண்டார்கள்.

இவனைத் திரும்பிப் பார்த்து, "ராஜாட்டதான் கொடுக்கணும். ராஜா வெளியே போயிருந்தா இருந்து பாத்துக் கொடுக்கணும். வேற யாரிட்டேயும் கொடுத்துட்டு வந்துரக்கூடாது, என்ன" என்று சொல்லிவிட்டுத் தட்டிலேயே கைகழுவிவிட்டு, லெட்டர் பேடை எடுத்து எழுத ஆரம்பித்தார்கள்.

அப்பா இப்படி வீட்டில் அடைந்து கிடப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அம்மாவின் அமைதியும் வழக்கத்துக்கு மாறாக இருந்தது. அக்கா மட்டும் என்றைக்கும்போல இருப்பதாகப் பட்டது.

அம்மாவின் முகம் கொஞ்சம் வீங்கியிருப்பது மாதிரி தெரிந்தது. அப்பா எப்பொழுதுமே அதிகம் பேசுகிறவள் இல்லை. அவளுடைய பேச்சு இன்னும் குறைந்துவிட்டது. ஆனால் காலையில் எழுந்து வாசல் தெளிகிக்றாள். கோலம் போடுகிறாள். சேகருக்கு நெஸ்டில் கரைத்துக் கொடுக்கிறாள். அக்காவுக்கும் இவனுக்கும் எந்க சலனமுமில்லாமல் பால் காய்ச்சிக் கெண்டு வருகிறாள், அப்பாவை வேளா வேளைக்கு எழுப்பிச் சாப்பிடச் சொல்கிறாள். அந்தியானதும் விளக்கு பூஜை பண்ணுகிறாள். ஏதோ கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்று வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் பழைய தன்மை இல்லையென்று தெரிந்தது.

அப்பா சிகரெட் பிடிப்பதையே மறந்துவிட்டதுபோல இருந்தார்கள். எண்ணித்தான் பேசுகிறார்கள். வீட்டில் என்ன நடக்கிறது என்று இவனுக்குப் புரியவில்லை. அம்மா வாய்க்காலுக்குப் போவதையே விட்டுவிட்டாள்.

வாடகை கேட்டு வந்தபோது, "ரெண்டு நாள்ல கொடுத்துர்றோம்" என்று சொல்லியனுப்பினாள். மளிகைக் கடையிலருந்து ஆளூா வந்து வழக்கம்போல மூடையை இறக்கிவைத்த போது அப்பாதான் சொன்னார்கள்: அடுத்த வார வாக்கில கடைக்கு வர்றேன்னு முதலாளிட்ட சொல்லுய்யா". கல்லிடைக்குறிச்சி ஊருக்கு வந்த இந்த இரண்டு வரு'த்தில் இதுபோல ஆனதில்லை. எல்லாமே தம்பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தது. இப்பொழுதுதான் இப்படி.

பஸ்ஸில்தான் போகச் சொன்னார்கள் அப்பா. இவன்தான் நடந்தே போய்விடலாம் என்றது. பாபவிநாசம் - மணிமுத்தாறு பஸ் அடிக்கடி கிடையாது. மணிக்கு ஒன்று விட்டிருந்தார்கள். கல்லிடைக்குறிச்சி - மணிமுத்தாறு பஸ் இரண்டு ஓடிக்கொண்டிருந்தது. இரண்டுமே பயோனியர் பஸ்தான். அதில் போனாலும் விலக்கில் இறங்கி நடந்துபோக வேண்டும். அதைவிட ஒரேயடியாக நடந்துவிடலாம்.

வீட்டிலிருந்து கொஞ்ச தூரம் போய் வலதுபுறம் திரும்பினால் ஒரு சாலை. அதில் சிறிது தொலைவு சென்று தெற்குமுகமாய்ப் பிரியும் ரோட்டில் நடந்தால் லெவல்கிராஸிங். அதைக் கடந்து போய்க் கொண்டிருந்தால் ஒரு ஆலமரம். இன்னும் சற்று தூரத்தில் ஒரு குளம் வரும். அதுதான் அயன் சிங்கம்பட்டி வந்துவிட்டதற்கு அடையாளம். அங்கேயிருந்து அப்படியே போனால் ஜமீன் சிங்கம்பட்டி வந்துவிடும்.

ஊருக்கு மேற்குப்புறமாய் அரண்மனை. பெரிய முகப்பு. பெரிய பெரிய தூண்கள். நீளநீளமான படிகள். மேலேறி முகப்பைக் கடந்ததும் நீண்ட ஹால். ஹாலின் நடுவே கண்ணாடிப் பேழைக்குள் பாடம் செய்யப்பட்ட புலி. எதிரே நெடுஞ்சுவரின்மேலே குறுக்குவசத்தில் மாட்டப்பட்டிருக்கும் வாள்கள்.

கொஞ்சம் உள்ளே போனதும் வரும் தோட்டம். மத்தியில் ஒரு பெரிய கட்டடம். உள்வாசலையொட்டி தர்பார் மண்டபத்தில் நடுநாயகமாக சிம்மாசனம். வலதுபுறமும் இடதுபுறமும் வரிசையாக மரநாற்காலிகள். சிம்மாசனத்துக்கு எதிரே பெரிய மேஜை. மேஜைமீது பேட், பைலட் பேனா, கண்ணாடித் தம்ளரில் தண்ணீர்.

எதிரே வந்த டவாலி அணிந்த ஒருவர், "யாரைப் பாக்ககணும்" என்று விசாரித்தார். இவன், "ராஜாவைப் பாக்கணும்" என்றதும், "என்ன விஷயம்" என்று கேட்டார்.

"நான் அழகுசுந்தரம்பிள்ளை மகன். அப்பா, ராஜாவுக்கு லெட்டர் கொடுத்து அனுப்பிச்சிருக்காங்க," என்றதும், கொஞ்சம் தள்ளி ஓரமாய்க் கிடந்த நாற்காலியைக் காட்டி, "இப்படி உட்காருங்க ஐயா. இன்னும் கொஞ்ச நேரத்தில ராஜா வந்துருவாங்க, பாக்கலாம்" என்று பவ்யமாக சொன்னவர், "ஓவல் சாப்பிடுறீங்களா" என்று கேட்டுவிட்டு வலதுபுறமாக உள்ளே போனார்.

ஒரே இடத்தில் இருந்து கொண்டிருப்பது சலிப்பாக இருந்தது. இவனிடம் கொடுத்திவிட்டுப் போன அம்புலிமாமா, கலைமகள், மஞ்சரி, ஆனந்தவிகடன், கல்கி எல்லாவற்றையும் பார்த்து முடித்து விட்டான். எழுந்து நின்று சோம்பல் முறித்தான். கொஞ்ச நேரம் நடந்துவிட்டு வரலாம் போல இருந்தது. தூண்களில் மாட்டியிருந்த போட்டோக்கள் கண்ணில் பட்டன. ஒரு போட்டோவில் சுடப்பட்டுக் கீழே விழுந்து கிடந்த யானையின் மேல் துப்பாக்கியை ஊன்றியபடி தோரணையாய் ஜமீன்தார் நின்றிருக்க, சுற்றிச்சூழ நாலைந்து பேர். இன்னொரு போட்டோவில் தர்பார் உடையுடன் மகாராஜா. வேறொரு போட்டோ ராஜா பட்டமேற்றது. ராஜாவின் சின்ன வயசு போட்டோ. வேக்ஸால் காரில் சாய்ந்து நிற்கும் மகாராஜா. வெவ்வேறு கார்களின் படங்கள்.

அப்படியே தோட்டத்தைச் சுற்றி வந்தான். பெரிய பெரிய மா, மாதுளம், கொய்யா, அருநெல்லி மரங்கள். தொட்டிச் செடிகள். குரோட்டன்ஸ். நிழலும் குளுமையுமாய் இருந்தது.

"ஐயா" என்ற குரல்கேட்டுத் திரும்பிப் பார்த்தான். "மகாராஜா கூட்டிட்டு வரச்சொன்னாங்க" என்ற டவாலி சேவகருடன் கூடவே போனான்.

இளமையும் அழகும் நிரம்பிய ராஜா அவர்கள் சிரித்தமுகத்துடன் வரவேற்றார்கள். இவன் கைகுவித்து, "வணக்கம் மகாராஜா" என்று கும்பிட்டான்.

"வாய்யா, அப்பா எப்படி இருக்காங்க" என்றார்கள் ராஜா.

"நல்லா இருக்காங்க" என்றவன் சட்டைப் பையிலிருந்து லெட்டரை எடுத்துக் கொடுத்தான்.

படித்துவிட்டு, "அப்பாட்டே சொல்லுய்யா. இரண்டு நாள்ல வந்து பாக்கிறேன்" என்றவர்கள், வலதுபுறம் நின்றிருந்த டவாலி சேவகரைப் பார்த்து, "ஆறுமுகத்தேவரே, நம்ம அழகு அண்ணன் மகன். வீட்ல கொண்டுபோய் விட்டுட்டு வாங்க. ஒரு கவர் தர்றேன், கொடுத்திருங்க. சாப்பாடு பண்ணிக் கூட்டிட்டு போங்க" என்றார்கள்.

"உத்தரவு மகாராஜா" என்று வாய்பொத்தியபடியே அவர் பின்னோக்கி நகர்ந்து இவனை அழைத்துக் கொண்டுபோனார்.

ஆறுமுகத்தேவர் கவரை அப்பாவிடம் கொடுத்துவிட்டு, "நல்லா இருக்கீங்களாய்யா" என்று விசாரித்தார்.

"பரவால்ல தேவரே. பையங்க எப்படி இருக்காங்க" என்று கேட்டுவிட்டு, தலையணைக்கு அடியிலிருந்து பத்து ரூபாய்த் தாளை எடுத்துக் கொடுத்தார்க்ள். அவர் போனபிறகு சாவதானமாக கவரைப் பிரித்துப் பார்த்து சட்டைப்பையில் வைத்து கொண்டார்கள்.

பணத்தை அம்மாவிடம் கொடுத்து, "லட்சுமி, வாடகை, பால் பாக்கி எல்லாம் கொடுத்துரும்மா" என்றார்கள்.

அப்பா சலூனுக்குப் போய் முடிவெட்டிக்கொண்டு வந்தார்கள். கொஞ்சம் மெலிந்திருப்பது போலத் தெரிந்தது. சற்று சோர்வாக இருப்பது மாதிரியும் பட்டது. அங்கணத்துக்குப் பக்கமிருந்த சிமெண்ட் தொட்டித் தண்ணீரில் குளித்துவிட்டு வந்தார்கள். அம்மாவைப்பார்த்து, "லட்சுமி, வெளி வரைக்கும் போயிட்டு வந்துர்றேன்" என்றபடியே டிரங்க் பெட்டியில் இருந்து பேண்ட்ஷர்ட் எடுத்துப் போட்டுக் கொண்டார்கள். "சோறு எடுத்து வைக்கட்டுமா" என்று அம்மை கேட்டதற்கு, "பசியில்லம்மா" என்று சொல்லிவிட்டார்கள்.

லெதர் பேக்கில் நாலைந்து பேண்ட், ஷர்ட், பனியன், கர்சீப் செட் எல்லாம் எடுத்து வைத்தார்கள். இவ்வளவுக்குப் பின்னும் அப்பாவின் அழகு, சுறுசுறுப்பு, வேகம் எதுவும் மாறிவிடவில்லை.

அம்மா ஒன்றுமே சொல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வரட்டுமா" என்றபடி கிளம்பியவர்கள், "சிவா ஸ்கூல்ல இருந்து வந்ததும் சொல்லு. நான் வந்துருவேன்" என்று புறப்பட்டுப் போனார்கள்.

அன்றைக்குப் போனதுதான்.



முற்றும்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்கள்!

நிறைவுறா இரவுகளின்
முடிவில்
நெக்குருகி நிற்கிறது – என்
வாழ்க்கை..

நீர் ஊறா வயலில்
நேற்றெறிந்த நெல் மணியாய்
உன் நினைவுகள்...
வளரும் அப் பயிர் என
வரப்பில் நான்...
ஓர் அப்பனாய் - உன்
வருகைக்காய் காத்திருக்கிறேன்

உன் பிறப்பிற்
பேய்.. தாயைத்
தின்றது..

துணையின்றி நான்
தாயின்றி நீ
பல பகல்கள்
பல இரவுகள்
தாயும் துணையுமின்றி
நாம்...

உன் காலுதைவிற்
காமம்
காணமற் போனேன் நான்

கஞ்சியைப் பாலாய்
உண்டு வளர்ந்தாய்...
நீ வளர்ந்த நாட்களின்
முடிவில் - கறுத்த என்
மயிர்கள் நரைத்துப்போனது

காலம் உனை உயர்த்தி
எனை உதிர்த்த
ஒரு நாளில் -
காணாமற் போனாய்
நீ......

என் செல்வமே....
நீ காணாமற் போனாயடா..

வீடும், வயலும்
வாசலும், வரம்புகளும்

வாலை ஆட்டி எம்
வாழ்வுடன் கலந்த இரு
நாய்களும்..

சுத்தமில்லாத உன் அறை..
அதிற் சிதறிக் கிடக்கும்
பாடப்புத்தகங்கள்-இன்னும்
பார்த்து முடிக்காத சில
பட இறுவட்டுக்கள்

தோய்க்கப்படாமல்
தொங்க விட்டிருக்கும்
உன் சறம்....

ஆழச் சுவரிற்
பதிந்த ஆணியில்
கொழுவிக்கிடக்கும்
தவழும் படம்...

இவையெல்லாம்
என்னுடன் இருக்க
நீ – காணாமற் போனாய்

சட்டமிடப்பட்ட உன்
படத்தைக் கையிலேந்தி
முகாம்கள் ஒவ்வொன்றாய் அலைந்து...

முடிவில்
வருவாய் நீ எனும்
நம்பிக்கையற்றுப்போன
இன்னாளில் கூட
நம்பவில்லை நான் - நீ
கடத்தப்பட்டாய் என்று

ஆறு நாள் உணவறுத்துக்
கவசம் பாடி
உனை மீட்டுத்தர – வேல்
முருகனையும் வேண்டித்
தோற்றுப் போனேன் நான்

என் செல்வமே

நாதியற்றுச் சிதையூட்ட
எவருமின்றிப்
பிணமாய்க் கிடக்கும் - அந்
நாளில்

ஆவியாய் ஆவது
வந்து எரியூட்டுவாயா
என் செல்வமே....

-- மாயன் --



# "பட்டினிசா"

நெஞ்சு பொறுக்குதில்லை
நிலைகெட்ட மாந்தர்
பஞ்சத்தால் மடிவதை
பார்க்கவும் முடியலையே
கஞ்சி குடித்தே மண்ணில்
காரியங்கள் பல செய்த
பிஞ்சுக் குழந்தைகளும்
பேரழிவால் மடிவதை

வண்ணச் சிறகடித்து
வானத்தில் பறந்து சென்ற
என்னருமை தமிழர்கள்
இழிநிலையால் சாவதை
சின்னவிழி கொண்டு
சீராக நாம் நோக்க
என்ன பயன் பெற்றோம்
ஏன் இந்தக் கொடுமை

வட்டிலிலே சோறெடுத்து
வாயார உண்ட நாம்
பட்டியலை கூறவா
பரம்பரையை சொல்லவா
முட்டிமோதி அன்னதானம்
மூட்டியதை காட்டவர்
பட்டினியால் மனிதன்
பரிதவிப்பதை பார்க்கவா

சி.என்.துரைராஜா

# சொல்லாதே

புகழுக் கலையாதே - பச்சைப்
புளகினில் நில்லாதே!
அகத்தில் எரிவோடும் - மிகவும்
அழிவுகள் செய்யாதே!

நல்லவர் செய்ததெலாம் - நீயே
'நான்' என்று சொல்லாதே!
வல்லமை கொண்டுயர்வாய்! - புவியில்
வாழ்வாங்கு வாழ்த்திடுவாய்!

ஆரியக் கூத்துகட்கு - என்றுமே
ஆட்பட்டுப் போகாதே!
பாரில் தமிழ் பரவ - தங்கையே
பாடுகள் பட்டிடுவாய்!

சொல்லுடனே செயலும் - இணையத்
தூயபணி புரிவாய்!
நல்ல நினைவுகளே - முடிவில்
நல்ல புகழ் தருமாம்!

– தாமரைத்தீவான் –
[ஊச்சந்தீவு கிண்ணியா]

# வாசிப்பில் ஆர்வம் வேண்டும்

வாசிப்பில் ஆர்வம் வேண்டும்
வார்த்தையில் இனிமை வேண்டும்
யோசித்து நடக்க வேண்டும்
தாசியுறவினை தவிர்க்க வேண்டும்

ஆசைக்கும் ஒரு அளவு வேண்டும்
ஆத்திரத்தை அடக்க வேண்டும்
தேசத்தை நேசிக்க வேண்டும்
தெய்வ தரிசனம் செய்ய வேண்டும்

நீசருறவை நிறுத்த வேண்டும்
நெஞ்சினில் உறுதி வேண்டும்
வாசமலர் பறித்து ஈசனுக்கு சூட்டவேண்டும்
வாரம் சனி தோறும் மலைமுரசை
வாங்கிப் படிக்க வேண்டும்!

கவிக்குயிலன் -
சேனையூரான்

# கவிமுரசு



## என் வாழ்வின் ஒளி வழிகாட்டி

ஜீவநதியாக என்நெஞ்சில்
தவிழ்கின்ற முழு நிலவே
நீயேதான் என் வாழ்வின் ஒளி
வழிகாட்டி!

ஆடிப் பாடி அசைந்து வரும்
ஆரணங்கே - அன்பே
கோடி செம்பொன்னையும்
மிஞ்சி விட்ட
கோகினூர் வைரமடி - நீ
எனக்கு!

நான்
கவலையுறும் போதெல்லாம்
உன்இளய
கனிமுகத்தைக்காட்டி
இனிய தமிழ் வார்த்தைகளால்
இதமளித்து
மணி மணியாய் பல்தெரிய
புன்னகைத்து - என்
மனதுக்கு சுகமளிக்கும் சுந்தரியே
நீயேதான் என் வாழ்வின் ஒளி
வழிகாட்டி!

சேனையூரான்

உங்கள் கவிதைகளையும்
பிரசுரிக்க விரும்பின்
அனுப்பி வைக்கவும்
மலைமுரசு அலுவலகத்திற்கு!!

# கொட்டியாபுரத்து சிங்கம்

சம்பூர் சதீஸின்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

மனமகிழ்ந்த இளஞ்சிங்கனும் புலவரை வணங்கி புலவர் பெருமானே தாங்கள் யார்? தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று வேண்டினான்.

இனி... ...

அவர் தன்னை வீரக்கோன் முதலியார் என்றும் தான் தம்பலகாமப்பற்றை சேர்ந்தவர் என்றும் அறிமுகப்படுத்தினார். பின்னர் தான் வந்த விபரத்தைக் கூறலானார்.

இருமரபுந்துய்ய இளஞ்சிங்க வன்னிமையே உமது பாதங்களுக்கு வணக்கம். நான் சீர்பூத்த வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமியின் மீது பாடல் ஒன்று இயற்றியுள்ளேன். அதை உமது காலத்திலேயே, உம்முடையே தலைமையிலேயே அரங்கேற்றும் எண்ணம் கொண்டேன். ஏனெனில் அழிக்கப்பட்டு வரும் இந்து மதத்தையும், தமிழ் மொழியையும் காத்து வருகின்ற பெரும் பொறுப்பை நீர் செய்து வருவது தமிழர் தேசம் முழுவதும் பெருமையாகப் பேசப்படுகின்றது. அதே போல உமது நண்பரும் கண்டியரசருமாகிய இராஜசிங்கன் மகாராசாவும் இந்து மதத்தை ஆதரித்ததோடு நில்லாது, வெருகலில் கோவில் கொண்டுள்ள முருகப் பெருமானுக்கு மானியங்களும், தங்கப் பதக்கங்களும் வழங்கி இறை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். எனவே இச்சந்தர்ப்பமே இந்நூலை அரங்கேற்றப் பொருத்தமான சமயம் என நினைத்து உமது ஆதரவை வேண்டி வந்துள்ளேன் என்றார்.

வன்னிமையும் இருக்கை விட்டெழுந்து "புலவரே!. இது என் வாழ்நாளில் கிடைத்த அரும்பெரும் பாக்கியம். உமது எண்ணம் போல் அரங்கேற்றம் வெருகல் சித்திரவேலாயதர் சுவாமி கோவில் மகாமண்டபத்தில் எம் தேசத்து மக்கள் முன்னிலையில் பிரமாண்டமான முறையில் நடைபெறும். யாதொரு குறையுமின்றி உமது அரங்கேற்றம் நிகழும் என்று கூறி புலவரை வழியனுப்பி வைத்தான்.

தளபதியை அழைத்து அரங்கேற்றம் சிறப்புற நிகழ்வதற்கான ஏற்பாடுகளை புலவருடன் இணைந்து மேற்கொள்ளும்படி ஆலோசனை வழங்கினான். அரங்கேற்றத்திற்கு குறிக்கப்பட்ட நாளும் வந்தது.

வெருகல் பதியானது சிறப்புற அலங்கரிக்கப்பட்டது. கங்கையாற்றுக்கு அப்பால் கதிரவெளி நகர் வரையும் வீதிகள் அலங்கரிக்கப் பட்டிருந்தன. கண்டியரசன் இராஜசிங்கனுக்கும், கண்டி இராச்சியத்திற்குட்பட்ட வன்னிச் சிற்றரசுகளுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது. பல வன்னி நாட்டு தமிழ்ப் புலவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

புலவர் வீரக்கோன் முதலியாரும் அவர் இயற்றிய பாடல் சுவடிகளும் அலங்கரிக்கப்பட்ட யானை மீதேற்றி இளஞ்சிங்க வன்னிபத்தால் வெருகலம்பதியை நோக்கி அழைத்து வரப்பட்டனர். முன்னே மேளதாளங்களுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க இருமருங்கிலும் மக்கள் மலர்களைத் தூவி வரவேற்றனர். ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் மகாமண்டபம் மலர்களால் சோடனை செய்யப்பட்டு ஒரு தேவலோக சபை போல தோற்றப் பொலிவுடன் காணப்பட்டது. இவைகளைக் கண்ணுற்ற வீரக்கோன் முதலியார் நன்றிப் பெருக்குடன் இளஞ்சிங்க மன்னனை நோக்கினான். இவ்வளவு மிகப் பிரமாதமான அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்த மன்னனுக்கு தனது கண்களால் நன்றி தெரிவித்தார்.

அவை முதல்வராக வீற்றிருந்த புலவர் தானியற்றிய வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் என்னும் நூலை அரங்கேற்றம் செய்தார். அக்கூட்டத்திலே திருகோணமலை தேசத்து மக்களும், மட்டக்களப்பு தேசத்து மக்களும், கண்டியரசன் பிரதிநிதிகளும் பங்கு கொண்டிருந்தனர். கொட்டியாபுர தேசத்து வன்னிமை இளஞ்சிங்கம் தலைமையில் நடைபெற்ற அரங்கேற்றம் ஒரு பெரும்விழாவைப் போல நிகழ்ந்தது.

அரங்கேற்ற முடிவில் இங்கு வந்திருந்த புலவர்களும் சிற்றரசர்களும், அரச பிரதிநிதிகளும் நினைவுப் பரிசில்களுடன் கௌரவமாக இளஞ்சிங்க வன்னிபத்தால் வழியனுப்பி வைக்கப்பட்டனர். வீரக்கோன் முதலியாரும் மன்னனுக்குத் தன் நன்றியைத் தெரிவித்ததோடு இளஞ்சிங்க வன்னிமையே உன் புகழ் இப்புவியுள்ள வரை பரவியிருக்கும் என்று கூறி வாழ்த்தினார்.

இளஞ்சிங்க வன்னியாரும் புலவரை வெகுமதிகள் பலவற்றுடன் வழியனுப்பி வைத்தார். தொங்கும் தசை



கொண்ட கன்னங்கள், பழுத்த நரை கொண்ட சேசங்கள் இருந்த போதும், தளராத மிடுக்கான நடை கொண்ட இளஞ்சிங்க வன்னிபம் தனக்கு வயதாகிய நிலையை உணர்ந்து தனது மருமகருக்கு வன்னிமைப் பட்டங்கட்ட தயாராகுமாறு மந்திரிக்கு ஆணையிட்டு வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் முன்னிலையில் தியானத்திலீடுபட்டார்.

**முற்றும்.....**

அடுத்த வாரம்
இன்னுமொரு இலக்கிய
வரலாற்றுடன்
தொடரும்.. ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நான் இப்படித்தான்

மனசில் பட்டதை படக்கென்று பேசி விடுவதால், 'மனு'ன் நல்லவருப்பா' இமேஜ் தானாகவே வந்துவிட்டது. தான் ஹீரோவாக நடிக்கும் பட இயக்குனர்களிடம், நடுவில நல்ல கதைய யாராவது சொல்லி ஒரு சீன்ல வர்ற கெஸ்ட் ரோல்ல நடிக்க கூப்பிட்டாலும் போவேன். தப்பு சொல்லக்கூடாது. இப்பவே சொல்லிட்டேன் என்பாராம்.

## ஆசிரியையா! கவர்ச்சி இல்லையா!!



தெலுங்கில் பிரபலமாக உள்ள ஒரு இயக்குனர் அனுஷ்காவை அணுகி தன்னுடைய படத்தில் ஆசிரியை வேடம் ஒன்றில் நடிக்க கால்ஷீட் கேட்டார். கதை முழுவதையும் கேட்ட அனுஷ்கா, இந்த படத்தில் படம் முழுவதும் சேலை கட்டி கவர்ச்சியே இல்லாமல் நடிக்க முடியாது என்றும், மேலும் ஆசிரியை வேடத்தில் நடித்தால் வயதான வேடம் போல் தோன்றும் என்று கூறி அந்த படத்தில் நடிக்க மறுத்துவிட்டாராம்.

புனிதமான ஆசிரியை வேடத்தில் கிளாமர் இல்லாமல் நடிக்க மறுத்த அனுஷ்காவுக்கு கடும் கண்டங்கள் எழுந்துள்ளது.



## அடுத்த 'தல'

"அஞ்சலி" படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி "காதல் வைரஸ்" படம் மூலம் கதாநாயகனாக அறிமுகமானவர் ரிச்சர்ட். இவர் தற்போது நடித்து வரும் புதிய படம் 'சுற்றுலா'. 'மங்காத்தா' படத்தில் அஜீத் வில்லத்தனம் கலந்த கதாநாயகனாக நடித்திருந்தார். அதேபோல் ரிச்சர்ட்டும் இந்தப் படத்தில் வில்லத்தனம் கலந்த கதாநாயகனாக நடித்து வருகிறார்.

## உஷாரான சிவகார்த்தி



சிக்ஸ்பேக் கலாச்சாரம் வந்தாலும் வந்தது. கருவாட்டை கவுத்துப் போட்ட மாதிரி ஒட்டிய வயிறோடு திரிய ஆரம்பித்திருக்கிறார்கள் தமிழ்ப்பட ஹீரோக்கள் பலர். படத்தில் வருதோ, இல்லையோ? சும்மா சீன் காட்டணும் என்பதற்காகவே அப்படியெல்லாம் உடலை வருத்தி கொள்ளும் இவர்களில் சிவ கார்த்திகேயன் மட்டும் உஷார். என்னை அப்படியெல்லாம் துன்பப்பட வைக்காதீங்க என்று கூறிவிடுவாராம்.



## 9 நிமிட பாடல் காட்சி - விக்ரம்

விக்ரம் "ஐ" படத்திற்குப் பிறகு விஜய் மில்டன் இயக்கும் "பத்து எண்றதுக்குள்ள" படத்தில் நடித்து வருகிறார். இதில் இவருக்கு ஜோடியாக சமந்தா நடிக்கிறார்.

இப்படத்தில் நடிகை சார்மி, பாடல் ஒன்றுக்கு நடனமாடவுள்ளார். திரையில் 9 நிமிடங்கள் இடம்பெறும் இப்பாடல் அனைவரையும் கவரும் என்றும் படக்குழுவினர் கூறுகின்றனர்.

## காலம் கனிந்தது - தமன்னா



தமன்னா கடைசியாக தமிழில் நடித்த வீரம் படம் மிகப்பெரிய வெற்றியடைந்தும் அவருக்கு பலனில்லாமல் போய்விட்டது. தமிழில் தமன்னாவுக்கு புதுப்பட வரவுகள் கிடைக்கவில்லை. தற்போது ஆறுதலாக கிடைத்திருக்கிறது ஆர்யாவின் பட வாய்ப்பு. தற்போது உருவாக்கிக் கொண்டிருக்கும் ஸ்கிரிப்ட் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தின் இரண்டாம் பாகம் அல்ல. இது முற்றிலும் புதிய ஒரு கதை. இதில் ஆர்யா, தமன்னா, சந்தானம் ஆகியோர் நடிக்கிறார்கள்.



## மேலும் குழப்பத்தில் கத்தி

"ஐ" படத்தின் தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரன் "ஐ" திரைப்படத்தை கண்டிப்பாக தீபாவளியில் வெளியிட்டே தீருவோம் என்று கூறியுள்ளார். மேலும் "ஐ" படத்தின் வெளியீடு காலதாமதம் ஆகும் என விஜய் தரப்பே வதந்தி கிளப்பிவிடுவதாக தற்போது திடுக்கிடும் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. தற்போதைய நிலையில் "ஐ" படம் வெளியாவது உறுதியானால் கண்டிப்பாக கத்திக்காக புக் ஆகியிருக்கும் பல தியேட்டர்கள் கைமாறும் நிலை உள்ளதாக கூறப்படுகிறது.

## எப்படி சாத்தியம்??



அஜீத்தின் மூன்றாவது கெட்டப் ரகசியம் எப்படி கசிந்தது என்பது உறுதியாக யாருக்கும் தெரியவில்லை என்றாலும் கவுதம் மேனன் அவசரப்பட்டு அஜீத் மீது சந்தேகம் கொண்டதால் அஜீத், இயக்குனர் மேல் செம கடுப்பில் இருக்கின்றாராம். இந்த படத்தின் இரண்டாவது பாகத்தில் நடிப்பதாக வாக்கு கொடுத்திருந்த அஜீத், அந்த வாக்குறுதியை இனி காப்பாற்றுவாரா என்பது சந்தேகம் என கூறப்படுகிறது.

### செல்லம் நீ யாரும்மா?



சென்ற வாரம் நயன்



## "பூலோகம்"

ஏற்கனவே தீபாவளி அன்று, விஜய்யின் 'கத்தி', விஷாலின் 'பூஜை' ஆகிய படங்கள் வெளியாகின்றன. தனது தயாரிப்பான 'ஐ' படம் ரிலீஸ் நவம்பர் மாதத்திற்கு தள்ளிப் போனதால், பூலோகம் படத்தை தீபாவளிக்கு ரிலீஸ் செய்ய ஆஸ்கார் ரவிச்சந்திரன் முடிவு செய்துள்ளார்.

# சினிமுரசு

## திரை விமர்சனம்

### இயக்குனர் ரவி கே.சந்திரனின் யான்



### ஜீவா நடிக்கும்

வழக்கம்போல படித்துவிட்டு வேலையில்லாமல் சுற்றும் பட்டதாரி ஜீவா. ஒரு போலீஸ் என்கவுண்டர் சம்பவத்தில் நாயகி துளசியை சாதுர்யமாக காப்பாற்றி அவரை ஒருதலையாக காதலிக்கவும் செய்கிறார். தமிழ் சினிமா வழக்கப்படி வேலையில்லை என்ற காரணத்திற்காக ஜீவாவை வெறுக்கும் துளசியின் அப்பா நாசர், ஜீவாவை திட்டி அனுப்பிவிடுகிறார். இதனால் உடனடியாக ரோஷம் வந்த ஜீவா, வெளிநாட்டுக்கு சென்று லட்சம் லட்சமாக சம்பாதித்துக்கொண்டு வந்து துளசியை கைப்பிடிப்பதாக சவால் விட்டுவிட்டு, பலுஸிஸ்தான் என்ற உலக வரைபடத்திலேயே இல்லாத ஒரு நாட்டுக்கு பயணமாகிறார்.

கடுமையான சட்டங்கள் அமுலில் உள்ள அந்த நாட்டுக்கு சென்று இறங்கியவுடனே போதை மருந்து கடத்தலில் சிக்கி ஜெயிலில் அடைக்கப்படுகிறார் ஜீவா. ஜெயிலில் ஜீவாவுக்கு தம்பி ராமையாவுடன் பழக்கம் ஏற்படுகிறது. சில நாட்களில் தம்பி ராமையா விடுதலையாகி ஜீவாவின் பெற்றோர்களிடம் ஜீவா சிறையில் இருக்கும் விஷயத்தை சொல்கிறார். இதை கேள்விப்பட்ட துளசி, ஜீவாவை மீட்டு வருகிறேன் என சவால் விட்டு பலுஸிஸ்தான் செல்கிறார். அவர் சத்தியவான் சாவித்திரி மாதிரி காதலரை மீட்டாரா என்பதுதான் மீதிக்கதை.



முதல் பாதியில் வழக்கம்போல வேலை வெட்டி இல்லாத இளைஞர், பின்னர் பலுஸிஸ்தானில் சிறையில் தவிப்பது, சிறையில் இருந்து தப்பித்து துளசியுடன் இந்தியாவுக்கு வர அவர் எடுக்கும் முயற்சி என்று ஜீவாவின் நடிப்பில் எந்த குறையும் இல்லை. கவர்ச்சியும் நடிப்பையும் கலந்து ஒருங்கே கொடுத்துள்ளார். இந்த படத்தை பொறுத்தவரை துளசியின் நடிப்பு ஓகே.

தெளிவில்லாத ஸ்லோவான திரைக்கதை, நம்பமுடியாத காட்சிகள், இந்த படத்தை தாராளமாக பார்க்கலாம். படத்தின் ஒரே பிளஸ் ஹாரீஸ் ஜெயராஜின் அற்புதமான பின்னணி இசை.

மொத்தத்தில் "யான்" யாருக்கும் பிடிக்காது என்றே தோன்றுகிறது. .



## சினிமா கிசு கிசு



கிளாமரான ஆசிரியை ஒருவரின் இடுப்பை பத்து வயது மாணவன் உற்று பார்ப்பது போல் ஒரு போஸ்டரும், அதே ஆசிரியையின் தொப்புள் அருகே ஏக்கமாக ஒரு மாணவன் பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு போஸ்டரையும் ராம்கோபால் வர்மா வெளியிட்டுள்ளார்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட ஹெர்பல் பொருளான க்ரீம் ஒன்று தற்போது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த பொருளுக்கு இந்திய அம்பாசிடராக பிரபல கவர்ச்சிப் புயல் சன்னிலியோனை தேர்வு செய்துள்ளது. யார் பூசினால் உலகுக்கு காட்டலாம் என்பதை புரிந்து தெரிந்துள்ளனர் நிறுவனத்தினர்.

மோனல் கஜ்ஜார், அழகில் ஐஸ்கட்டியாக இருந்த
ாலும், நிஜத்தில் வைக்கிற சூடு!. 'கோடம்
பாக்கம், பொள்ளாச்சியில் ஃபைவ் ஸ்டார் ஓட்ட
ல்ஸ் இல்லையா?' என்று கேட்ட நடிகையெல்லாம் கூட பார்த்திருக்கிறோம். ஆனால் மோனல் போடுகிற கண்டிஷன் இருக்கே, இயக்குனர்களை மிரள வைக்கின்றதாம்.

சோனாக்சி இந்தியில் 'தீவர்' என்ற படத்தில் நடிக்கிறார். இதில் நாயகனாக நடிக்கும் அர்ஜுன் கபூருடன்தான் அவருக்கு காதல் மலர்ந்துள்ளதாகவும், டேடிங்; பார்க் என அவர்கள் சுற்றுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் நடிகை ஒருவர் போதையுடன் படப்பிடிப்புக்கு வந்து இயக்குனருக்கு கட்டுப்படாமல் தன்னுடைய இஷ்டம் போல் நடிப்பது என இயக்குனரையும், தொலைகாட்சி தொடர் தயாரிப்பாளரையும் எரிச்சலடைய செய்ததால் அதிரடியாக அந்த நடிகை நீக்கப்பட்டதாக தெரிகிறது.

நடிகை ஸ்வேதா பாசு விபச்சார வழக்கு ஒன்றில் சிக்கி கைது செய்யப்பட்டுள்ளார் இந்நிலையில் திடீர் திருப்பமாக பிரபல தெலுங்கு தயாரிப்பாளர் ஒருவர் இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஹிருத்திக் ரோஷன், கேத்ரினா கைப் ஜோடியாக இணைந்து நடித்த படம் "பேங் பேங்". இப்படம் முதல் 5 நாட்களில் உள்நாட்டில் மட்டுமே ரூ.156 கோடி வசூல் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

சிம்புதேவன் இயக்கும் இந்த படத்தில் விஜய் ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் "ஹேப்பி நியூ இயர்" படத்தை அடுத்து ஷாருக்கான் தயாரித்து நடிக்கவுள்ள அடுத்த படத்தில் ஹீரோயினாக நடிக்க ஸ்ருதிஹாசனுக்கு அழைப்பு வந்துள்ளதாகவும், இதனால் ஸ்ருதிஹாசன் விஜய் படத்தில் இருந்து விலக இருப்பதாகவும் பாலிவுட் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Robot மரம்



இதுவரை காலமும் விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட ரோபோக்களே உருவாக்கப்பட்டு வந்த நிலையில் இந்த மர ரோபோக்களின் உருவாக்கமானது தொழில்நுட்ப உலகில் உற்றுநோக்கப்படுகின்றது. PLANTOID எனப்படும் இந்த ரோபோக்களின் கிளைகள் பிளாஸ்டிக்கினால் உருவாக்கப்பட்டுள்ள . அதேவேளை இலைகள் சென்சார்களை கொண்டுள்ளது. இதன்மூலம் வெப்பநிலை, ஈரப்பதம், ஈர்ப்புவிசை, தொகை மற்றும் இரசாயனப் பதார்த்தங்களின் அளவை மதிப்பிடக்கூடியதாக காணப்படுகின்றது. மேலும் இந்த ரோபோ மரத்தில் இரண்டு வேர்கள் இணைக்கப்பட்டுள்ளன.

## புதிய சுவாச மின்கலம்

சூரிய ஒளியை மட்டுமே பயன்படுத்தி மின்சக்தியை சேமிக்கும் மின்கலங்கள் தற்போது பாவனையில் உள்ளன.

இதேவேளை காற்று மற்றும் ஒளியைப் பயன்படுத்தி தாமாகவே மின்சக்தியை சேமிக்கக்கூடிய உலகின் முதலாவது மின்கலத்தினை Ohio State University ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இவை டைட்டேனியம் டை ஒக்சைட்டினைக் கொண்டதும், டைட்டேனியம் காஸினால் ஆன வெளி உறையையும் கொண்டுள்ளதுடன் காற்றினை உட்புகவிடக்கூடிய கோல் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மின்கலமானது மின்சக்தி சேமிப்பில் முன்னைய சோலர் மின்கலங்களை விடவும் 25 சதவீதம் அதிகமான வினைத்திறனைக் கொண்டதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

## குறுஞ்செய்தியால் அழிப்பு



புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகமாகும் சந்தர்ப்பங்களில் கூடவே பல பிரச்சினைகளும் அறிமுகமாகின்றன. இவற்றில் கணனியில் தரவு, தகவல்களை சேமிக்கப்பயன்படும் சாதனங்களில் உள்ள தனிப்பட்ட தரவுகள் திருடப்படுவதும் ஒன்றாக காணப்படுகின்றது. ஆனால் இதற்கும் தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. அதாவது குஞ்செய்தி (SMS) அனுப்புவதனூடாக அதில் பதிக்கப்பட்டுள்ள தரவு, தகவல்களை தானாகவே அழிக்கக்கூடிய SSD சேமிப்பு நினைவகம் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சாதமானது 128GB சேமிப்புக் கொள்ளளவினை உடையதாகவும், Micro USB மற்றும் SATAII இணைப்பிகள் மூலம் கணினியுடன் இணைக்கும் வசதியினை உடையதாகவும் காணப்படுகின்றது.

## இயங்குதளம் 10

மைக்ரோசொப்ட் நிறுவனம் கணினிகளுக்காக இறுதிய அறிமுகம் செய்யப்பட்ட இயங்குதளமானது விண்டோஸ் 8.1 ஆகும். இதற்கு அடுத்தபடியாக விண்டோஸ் 9 இயங்குதளம் வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான உத்தியோகபூர்வமற்ற பல தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையில் அடுத்த இயங்குதள பதிப்பாக விண்டோஸ் 10 இனை அறிமுகம் செய்யவுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

## புதிய கேம் அறிமுகம்




Xbox One சாதனம் மற்றும் கணனிகளில் பயன்படுத்தக்கூடிய Project Spark எனும் ஹேமினை மைக்ரோசொப்ட் நிறுவனம் உருவாக்கியுள்ளது. பயனர்களை வெகுவாக கவரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்ஹேமினை இலவசமாக தரவிறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ள முடியும். எனினும் இதனுடன் மேலதிகமாக தரப்படும் விசேட ஒலிகள், எபெக்ட்கள், அனிமேஷசன்கள் போன்றவற்றினை உள்ளடக்கிய பொதியினை 39 டொலர்கள் செலுத்தி கொள்வனவு செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2G யிலும் இண்டர்நெட்




புதிய Streamline VersionI இன்ஸ்டால் செய்தால், 2G இண்டர்நெட் வசதியிலேயே மிகவேகமாக 3G போல இணையத்தில் நாம் நினைத்தவற்றை தேட முடியும். இந்த வசதி ஏற்கனவே இருந்த போதிலும் தற்போதுதான் பரவலாக அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

# விளையாட்டுப் பையன்

## iphone 6 வளையுமா??



ஐபோ ... னை சில வாடிக்கையாள ... ர்கள், தங்கள் பேண்ட்டின் ... பின்புறப் பைகளில் அதனை ... வைத்து எடுத்துப் பயன்படுத்தியபோ ... து, அது வளைவதனைக் கண்டு, அதிர்ச்சியடைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆப்பிள் நிறுவனம், இது குறித்து உடனடியாகஆய்வு செய்து, பதில் அறிக்கையினை தற்போது வெளியிட்டுள்ளது. வழக்கமான முறையில் ஐபோன் 6 பயன்படுத்துபவர்களின் போன் வளையாது என்றும் அசாதரணமான முறையில், வளையும்படி அதனைக் கையாள்பவர்களில், ஒரு சில போன்கள் மட்டுமே வளைந்துள்ளன. கால் சட்டைகளின் பின்புறப் பைகளில் தொடர்ந்து பல மணி நேரம் வளையும் வகையில் வைத்திருந்துவிட்டு எடுத்துப் பார்த்தால், வளைந்த நிலையில் இருக்க வாய்ப்புண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்கைப் இனி இல்லை!

இந்தியாவில் நவம்பர் 10ஆம் தேதி முதல் நிறுத்த உள்ளதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் அதிரடியாக அறிவித்துள்ளது. இந்தியாவில் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தங்களுடைய வருவாய் ஸ்கைப் வசதியால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் மைரோசாப்ட் இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இந்த அறிவிப்பு ஸ்கைப் இந்திய பயனாளிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இருப்பினும் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கும் ஸ்கைப் மூலம் பேச தொடர்ந்து அனுமதித்துள்ளதால் பயனாளிகள் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்துள்ளனர்.

## நொக்கியா - நோக்கியது



சென்னை அருகேயுள்ள ஸ்ரீபெரும்புதாரில் கடந்த 2006ஆம் ஆண்டுமுதல் இயங்கி வந்த நோக்கியா செல்போன் ஆலை வரும் நவம்பர் 1ஆம் தேதி மூடப்படுவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் கடந்த சில வருடங்களாக மிகவும் லாபத்துடன் இயங்கி வந்த நோக்கியா நிறுவனத்தை மைக்ரோசாப்ட் நிறுவனம் விலைக்கு வாங்கியது. ஆனால் சென்னை நோக்கியா நிறுவனம் திடீரென தமிழக அரசின் வரி பிரச்சனையில் சிக்கியதால் கடும் நெருக்கடியை சந்தித்தது. இதனால் இந்த ஆலையை வாங்கும் முடிவில் இருந்து மைக்ரோசாப்ட் நிறுவனம் பின்வாங்கிவிட்டது. நோக்கியாவை வாங்கும் ஒப்பந்தத்தையும் ரத்து செய்தது.

## ஃபேஸ்புக்கிற்கே சவால்

பேஸ்புக் நிறுவன மானது சில மாதங்களுக்கு முன்னர் குறுஞ்செய்திகளை அனுப்பக்கூடிய மொபைல் அப்பிளிக்கேஷன் ஆன WhatsApp இனை கொள்வனவு செய்திருந்தது. இந்நிலையில் கூகுள் நிறுவனமும் இவ்வாறானதொரு அப்பிளிக் கேஷனை தானே சுயமாக உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதுள்ள குறுஞ்செய்தி அப்பிளிக் கேஷன்களை விடவும் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டு வரும் இப்புதிய அப்பிளிக்கேஷன் அடுத்த வருடம் சோதனைக்காக வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### அஹிம்சை வழிப்போரின் ஆரம்பமே அஹிம்சை தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதே...

# காந்தியும் பெரியாரும்

அஹிம்சாமூர்த்தி காந்தியை சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாருடன் ஒப்பிடும் இக்கட்டுரை ஆய்வுக்கானதே!

வாரம் 02



நான் அந்தப் பெண்களைச் சந்தித்தபோது அவர்கள் கண்களில் களங்கம் எதுவும் தென்படவில்லை. உலகில் உள்ள மற்றப் பெண்களைப் போல அவர்களும் ஒழுக்கமான வாழ்க்கை வாழ முடியும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்தச் சகோதரிகளில் பெரும்பாலோர், சொல்லப் போனால் எல்லோருமே தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்ள விரும்புவதாக என்னிடம் தெரிவித்தனர். அவர்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியாவிட்டால் நான், அவர்களைக் குறைகூற மாட்டேன். அவர்கள் கதி எந்தச் சமூகத்தில் பின்னிப் பிணைந்து கிடக்கிறதோ அந்தச் சமூகத்தையே குறை சொல்வேன் என்றார்.

தமிழ்நாட்டில் சேரன்மாதேவியில் காங்கிரஸ் மற்றும் பார்ப்பனரல்லதார் தலைவர்களின் நிதி உதவியுடன், வ.வெ.சுப்ரமணிய அய்யரால் ஒரு தேசிய நிலையம் ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் பெயர் குருகுலம். அங்கு பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனி உணவு, தனி இடம், தனிப் பிரார்த்தனை. பார்ப்பனர் அல்லாதாருக்குத் தனி உணவு, தனி இடம், தனிப் பிரார்த்தனை என வேறுபாடு காட்டப்பட்டது. அதை எதிர்த்து காங்கிரசில் இருந்தபடியே போராடினார் பெரியார். கதர் போர்டு நிர்வாகத்தில் பெரியார் தலைவராக இருந்த போதிலும் காரியதரிசியாக அப்போது இருந்த சந்தானம் என்கிற பார்ப்பனரின் ஆதிக்கத்தால் கதர்போர்டு நிர்வாகம் முழுவதும் பார்ப்பனர் மயமாகி இருந்தது.

சகல வசதிகளையும் பார்ப்பனர்களே அனுபவித்து வந்ததை எதிர்த்துக் குரல் கொடுத்தார் பெரியார். அந்தப் போராட்டங்களில் காந்தியாரின் தலையீடு இருந்ததால் பெரியாரால் வெற்றிபெற முடியவில்லை. 1920லிருந்தே காங்கிரஸில் இருந்தபடி வகுப்புவாரி உரிமைக்காகப் போராடியவர் பெரியார். 1920, 1921, 1922, 1923, 1924இல் நடைபெற்ற திருநெல்வேலி, தஞ்சாவூர், திருப்பூர், சேலம், திருவண்ணாமலை காங்கிரஸ் மாநாடுகளைத் தொடர்ந்து 1925 காஞ்சிபுரம் மாநாட்டிலும் பெரியாரின் வகுப்புவாரி உரிமைத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டதால் காங்கிரஸிலிருந்து வெளியேறினார் பெரியார். காந்தியார் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை.

1934இல் மீண்டும் காந்தி மயிலாடுதுறை வந்தபோது பெரியார் காங்கிரசில் இல்லை. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தமிழ்நாட்டில் வலுப்பெற்றிருந்தது. 1927இல் கலந்துகொண்ட பலர் காந்தியின் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கூட்டம் குறைவாக இருப்பதைக் கண்ட காந்தி சென்ற முறை நான் இந்நகருக்கு வந்திருந்தபோது என் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பலர் இப்போது வரவில்லை என்று கூறினார்.

இந்தத் தகவல்கள் தமிழ்நாட்டில் காந்தி என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. சுயமரியாதை இயக்க வீராங்கனையும், தேவதாசி ஒழிப்புப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்தவருமான மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார் 1927இல் நடத்திய ஒரு மகளிர் மாநாட்டில்தான் காந்தி கலந்துகொண்டு உரையாற்றியதாக இராமாமிர்தத்தம்மையார் வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கூட்டம் நடைபெறுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னர் இராமாமிர்தத்தம்மாள் தலைமையில் இசைவேளாளர்கள் காந்தியைச் சந்தித்திருக்கின்றனர்.

ஆனால் இராமாமிர்தத்தம்மையார் பெயரை விடுத்து சில இசைவேளாளர் பெண்கள் காந்தியைச் சந்தித்ததாக அந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூவலூர் மூதாட்டியார் இருட்டடிக்கப்பட்டதைப் போன்றே வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் அளப்பற்கரிய தொண்டை காந்தியாரே மூடி மறைக்கவில்லையா?. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம், அய்.ஏ.எஸ் அதிகாரியான வெ.இறையன்பு அவர்கள் எழுதிய துரோகச் சுவடுகள் என்கிற நூலை அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

அடுத்தவாரம் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் -22

# நட்பும் எதிர்ப்பாலாரும்



(வி.என்.சந்திரகாந்தி)

நட்பைப் போல நன்மை தருவது உலகில் யாதொன்றும் இல்லை. நாம் நல்லோரிடத்து நட்பு பாராட்டுவதை அறிந்து கொண்டு எதிரிகள் கூட அஞ்சி ஒதுங்குவர். நல்லவர்களுடன் பழகும் முறையில் நாம் நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். அது எமக்கு அளவற்ற தைரியத்தை நல்கும். நாம் எங்கு சென்றாலும் எமக்கு உதவி செய்ய காத்திருப்பவர் எமது நண்பர்களே. வெளிநாடு செல்லும் பலருக்கு வழி காட்டிகளாக இருந்து துணை நிற்பவர்கள் நண்பர்களே!

நண்பர்கள் எமக்கு உதவி செய்யும் போது மகிழ்ச்சியுறும் நாம் அவர்களால் கண்டிக்கப்படும் போதும் அதன் தன்மையை அறிந்து எம்மை திருத்திக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். அதே போன்று எமது நண்பர் தவறான வழியில் செல்லும் போது அவரை கண்டிக்கும் உரிமையையும் நாம் எடுத்துக்கொள்ளல் வேண்டும். நண்பர் கவலையடைவாரே என்று நினைத்து அவரது தவறுகளை சுட்டிக்காட்டாமல் இருப்பது அவரை பாழுங்கிணற்றில் தள்ளுவது போன்ற செயலாகும்.

இன்று, சேர்ந்து குடிப்பது, மற்றவர்களுக்கு தீங்கு செய்வது, பிறர் பொருளை சூழ்ச்சியால் கவர்வது போன்றவை கூட நட்பின் அம்சங்களாக கருதப்படுகின்றது. இவற்றால் பாதிக்கப்படுவது அவர்களின் பெற்றோர், மனைவி, பிள்ளைகள் தாம் என்பதை அவர்கள் உணரமாட்டார்.

ஒரு நண்பன் நியாயமான வழியில் நடந்து அவனுக்கு துன்பமோ, தண்டனையோ நேருமாயின் அத் துன்பத்தில் நாமும் பங்கேற்கலாம். ஆனால் அவனது அடாவடித்தனமான செய்கைகளால் அவன் பாதிப்புக்குள்ளாகும் போது நாம் மனம் வருந்துவதைத் தவிர என்ன செய்ய இயலும்?. தவிர, நாம் நட்புக்கொள்ளும் போதே ஒருவனது ஒழுக்கத்தை ஆராய்ந்து முன் செல்ல வேண்டும். குடிப்பழக்கம் ஒருவனிடம் இருப்பதை தெரிந்து கொள்ளாமல் அன்பு பாராட்ட தொடங்கிவிட்டால் ஒரு நாள் அவன் 'பாரில்' குடிக்கும் சந்தர்ப்பத்தில் அது தவறு என்று அவனுக்கு சுட்டிக்காட்டுவதை விடுத்து நாமும் குடிக்க தொடங்குவோம். அதே போன்று ஏனைய தீய பழக்கங்களுக்கு ஆட்படுவதையிட்டும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எனவே நாம் நட்புக்கொள்ள முன்னர் ஒருவனது குணம், குடிப்பிறப்பு, மற்றும் குறைவற்ற சுற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து நட்புச் செய்ய வேண்டும். பழிக்கஞ்சுபவன் நல்ல நண்பனாவான். எமக்கு ஒரு கஷ்டம் வரும் போது தமது நட்பை கைவிடுபவர் சினேகத்தையும், உலகோடு இயைந்து நடவாதவர் நட்பையும் அதே போன்று தீக்குணமுடையோர் நட்பையும் தொடரக் கூடாது. சொல்லொன்று செயலொன்று என இருப்பவர் நட்பு எவ்வகையிலும் பயனற்றது!

முன்னரெல்லாம் நட்பென்பது ஒத்த பாலாருக்கிடையே ஏற்படும் சினேகத்தையே குறித்தது. இன்று ஆண், பெண் சமத்துவம் அதிகம் பேசப்படுகின்றது. இரு பாலாரும் அலுவலகத்தில் வேலை செய்தல், பிரயாணம் செய்தல், சுற்றுலா செல்லல், விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றல், போராட்டங்களில் ஈடுபடல், கல்வி கற்றல் என்று எங்கும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர்.

ஆணும், பெண்ணும் பழகினால் அது காதல் என்று மட்டும் பொருளாகாது. பல தேவைகளின் நிமித்தம் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய கால கட்டத்திற்குள் நாம் வந்து விட்டோம். பெண்கள் உயர் பதவிகளில் இருக்கும் அதே சமயம் 'ஆட்டோ' ஓட்டுனர்களாகவும், பேருந்து ஓட்டுனர்களாகவும், தொடருந்து ஓட்டுனர்களாகவும் இன்னும் கூறப்போனால் விண்வெளி வீராங்கனைகளாகவும் கூட வளர்ந்து விட்டார்கள். என்னதான் பெண்ணியம் பேசினாலும் எதிர்பாலாருக் கிடையேயான நட்பு சில கட்டுப்பாடுகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு இருப்பது மிகமிக அவசியமாக உள்ளது.

ஆண்களுடன் கடமை பார்க்கும் பெண்கள் தமது உடைகளிலிருந்து நடத்தைவரை அவதானத்துடன் இருக்க வேண்டும். அலுவலகம் சம்பந்தப்பட்ட விடயங்களைத் தவிர அநாவசியமாக தனது நேரத்தை அரட்டை அடிப்பதில் செலவழிக்கக்கூடாது. தனது சொந்த விடயங்களை ஆண்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. தனது கஷ்டங்களை கசியவிடக் கூடாது. முக்கியமாக பிற ஆண்களிடம் உதவி பெறக் கூடாது. பத்திரிகைகளில் பலதரப்பட்ட செய்திகளும் வரும். அவற்றை ஆண்களுடன் பகிர்ந்து கொள்வதும், பரிதாபப்பட்டு கதைப்பதும், கெக்கட்டமிட்டு சிரிப்பதும், மோசமான விளைவுகளை உண்டு பண்ணும். அலுவலகங்களில் மேலதிக நேரம் வேலை செய்யும் போது பிற பெண் அலுவலகர்களுடன் இணைந்து கடமையாற்ற வேண்டும். விடுமுறை நாட்களில் அவசர தேவைக்காக கடமைக்கு அழைக்கப்பட்டால் மற்றொரு பெண் அலுவலரது துணையுடன் செல்ல வேண்டும்.

பிரயாணம், சுற்றுலா போன்ற சமயங்களில் ஆண்களுடன் சேர்ந்து செல்ல வேண்டி இருப்பது சரி. ஆனால் உங்களுடன் வேறும் பெண்கள் இருக்க வேண்டும். விளையாட்டுப் போட்டிகளுக்கு பயிற்று விப்பாளராக அநேக சந்தர்ப்பங்களில் ஆண் பாலாரே இருப்பார். மைதானம் தவிர்ந்த உள்ளக அரங்குகளில் பயிற்சி பெறும் போது உங்களுடன் மேலும் பெண்கள் பங்கு கொள்வதாக இருக்க வேண்டும்.

சட்டரீதியாக அமைந்த இராணுவம், பொலிஸ், கப்பல்படை, விமானப்படை தவிர்ந்த போராட்ட குழுக்களில் இணைந்து போராடுவது பெண்களுக்கு ஆபத்தை உண்டு பண்ணலாம். அதே போன்று பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களிலும் ஆபத்துக்கள் நிரம்பி உள்ளன. நட்பு என்று நம்பி ஏமாந்து விடாதீர்கள். ஏனெனில் இறைவன் பெண்களையே உடல் ரீதியில் பொறுப்புக்கூறும் விதத்தில் படைத்திருக்கின்றான்!

எனது நண்பனின் மகன் ஒருவன் புதிதாக தொழில் வாய்ப்பு பெற்று நிறுவனம் ஒன்றில் இணைந்து கொண்டான். வேலை இருக்கும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் அவன் சக அலுவலரான இளம் யுவதி ஒருத்தியுடன் சாதாரணமாக பேசுவான். அவள் ஏற்கனவே ஒரு இளைஞனை காதலித்து பாதிப்புக்குள்ளாகி ஏமாந்தவள். அது பற்றியெல்லாம் அவள் சொல்லி சொல்லி அழுவதும் இளைஞன் அவளுக்காக பரிதாபப்பட்டு பேசுவதும் நட்பு என்ற எல்லைக்கு அப்பால் சென்று காதல் என்ற வலையில் அவர்களை வீழ்த்தியது. பல சிக்கல்களுக்கு மத்தியில் விவாகமும் நடந்தேறியது! ஆணும், பெண்ணும் பொது இடங்களில் நட்புடன் பழகுவது ஒரு பக்கம் நியாயமாக இருக்கட்டும். ஆனால் அதனை நியாயப்படுத்த வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டால் அவமானம்தான் எஞ்சும்!

# தேசிய SMS செய்திகள்

- **மீண்டும் ஆள் சேர்ப்பு**

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை, அடுத்த மாதமளவில் பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

- **கேஸ் விலை ரு250 ஆல் குறைப்பு**

கேஸ் விலையை குறைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளார்.

- **2016இன் பின்னரே ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும்**

தற்போதைய ஜனதிபதியின் பதிவிக்காலம் 2016ஆம் ஆண்டே நிறைவடைகின்றது. அவ்வாறான நிலையில் அதற்கு முன்னதாக பாராளுமன்ற தேர்தலை நடத்தக்கூடாது. அவ்வாறு நடைபெறுமாயின் அச்செயற்பாடனது சர்வாதிகார ஆட்சிக்கு வித்திடுவதாக அமையும் என எச்சரித்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

- **ஜனவரி 09ல் தேர்தல்**

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி ஜனாதிபதி தேர்தலை நடாத்த திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திச்சேவை ஒன்று தகவல்கள் வெளியிட்டுள்ளது.

- **திட்டமிட்டபடி போராட்டம் 10இல்**

வவுனியா மாவட்ட நீதிமன்றம் முன்பாக 10.10.2014 மேற்கொள்ளப்படவிருந்த கவனயீர்ப்புப் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் கி.தேவராசா தெரிவித்தார்.

- **பிரதி அமைச்சரின் கடைத் தொகுதி மீண்டும் தீக்கிரை**

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகில் உள்ள, பெற்றோலிய வளப் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவிற்குச் சொந்தமான கடைத் தொகுதியில் தீப்பற்றியுள்ளது. 6 மாதங்களுக்கு முன்னரும் குறித்த கடைத் தொகுதி தீக்கிரையானமை குறிப்பிடத்தக்கது.

- **ஜே.வி.பி - ஐ.தே.க வுடன் இணைகின்றதா?**

ஜே.வி.பி உறுப்பினர் சுமேத காரியவசம் ஐக்கிய தேசியக்கட்சியில் 10.10.2014 இணைந்துகொண்டார். கடந்த 10வருடமாக இப்பாகமுவ பிரதேச சபையின் ஜே.வி.பி உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **நாம் பேச்சவார்த்தை நடத்தவில்லை. அது வதந்தியாகும். எதிர்காலத்தில் திட்டமிடலாம்.**

எதிர்காலத்தில் ஆர்.எஸ்.எஸ்.அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி உடன்படிக்கையொன்றை செய்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் தெற்காசியா மற்றும் ஆசிய வலயத்தில் முஸ்லிம் தீவிரவாதமற்ற நிலைமையை கட்டுப்படுத்துவதும் பௌத்த மதத்தை பாதுகாப்பதுமே எமது இலக்காகும் என்கிறார் ஞானசார தேரர்.

- **தன் காதலியை கொலை செய்தவர் கைது**

குவைத்தில் வசித்துவந்த தனது காதலியான 33வயதான இலங்கை பெண்ணை மின்சாரம் பாய்ச்சி கொலை செய்தாக கூறப்படும் ஆப்கானிஸ்தானியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

- **இந்திய பிரஜைகள் இருவர் கைது**

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கல்முனை பஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து இந்திய பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- **வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் மீது தாக்குதல்**

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவர் கிருஸ்ணப்பிள்ளை தேவராசா (வயது 61) மீது நேற்று இரவு நெடுங்கேணி பிரதான இராணுவ முகாமுக்கு சமீபமாக வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

- **சிகரெட் விலை உயர்வு**

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் சிகரெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. சிகரெட் வகைகள் இரண்டு 1 மற்றும் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் அறிவித்துள்ளது.

- **மகிந்தவின் நிகழ்வுகளை புறக்கணிக்கும் கூட்டமைப்பு**

வடக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பங்குபற்றும் நிகழ்ச்சிகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கும் என நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் 12,13,14 ஆகிய 3 தினங்களும் ஜனாதிபதி பங்கேற்கும் நிகழ்வுகள் வடக்கின் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றது. எனினும் குறித்த நிகழ்வுகளுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் தவிர உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# நிகழ்வுகள்

## சிறுவர் தின நிகழ்ச்சி

ரோட்டரி கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச "சிறுவர் தினம் த்தினை கொண்டாடும் நோக்கில் ஊர்வலம் கழகத்தின் தலைவரினால் ஊர்வலமாக வழிநடத்திச் செல்லப்பட்டது. இதில் பல பாடசாலைகளைச் சேர்ந்த மாயவ மாணவிகளும், பெற்றோர்களும் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர். மாணவர்கள் தங்கள் கைகளில் பல்வேறு பதாதைகளை ஏந்திய வண்ணம் ஊர்வலத்தில் பங்கேற்றனர். இந்நிகழ்வு கடந்த 08.10.2014 அன்று புனித மரியாள் கல்லூரியில் ஆரம்பமாகி பொது போக்குவரத்து நிறுத்தத்தில் முடிவுற்றது.









## – கொலின் – "மகுடம்" பௌர்ணமி தின நிகழ்வு

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் பௌர்ணமி கலை நிகழ்வின் நான்காம் அமர்வு இன்று மாலை 04.30 மணிக்கு (08-10-2014) மட்டக்களப்பு மாநகர சபை நகர மண்டபத்தில் அரங்கம் நிறைந்த பார்வையாளர் மத்தியில் மிக பிரமாண்டமாக நடைபெற்றது. பல ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் மட்/ நகர மண்டபத்தில் நாடகம் ஒன்று மேடையேற்றப்பட்டது மட்டக்களப்பு நாடக ரசிகர்களுக்கு பெரு விருந்தாக அமைந்தது. நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்வுக்கு தலைமை தாங்கிய மண்முனை வடக்கு பிரதேச செயலாளர்திரு. வெ.தவராஜா, சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரி பணிப்பாளர் கலாநிதி கே.பிரேம்குமார், "நொண்டி நாடகம்" குழுவினர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 02

1. ஒரே குழுவாக ஓரிடத்தில் வாழும் பிராணிகளின் கூட்டம் எது?
   1. காகம் 2. கிளி 3. வெளவால் 4. கறையான்

2. இளம் மஞ்சள் நிறம் சார்ந்த முட்டைகளை இட்டு இனப்பெருக்கும் பிராணி எது?
   1. தேனி 2. நத்தை 3. தவளை 4. ஓணான்

3. இலை குழைகளை உக்கலடையச் செய்து மண்ணின் வளத்தை அதிகரிக்கும் பிராணி எது?
   1. கறையான் 2. மண்புழு 3. காளான் 4. காகம்

4. ஆடையில் படிந்த தார் கறையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள்?
   1. மண்ணெண்ணெய் 2. எலுமிச்சம் புளி
   3. நல்லெண்ணெய் 4. வினாகிரி

5. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம்?
   1. அயடீன் குறைபாடு 2. விற்றமின் குறைபாடு
   3. இரும்புச்சத்துகுறைபாடு 4. கல்சியக்குறைபாடு

6. இலங்கை மக்களின் பிரதான உணவு அரிசிச்சோறு. இலங்கையில் அதிகளவு நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம் எது?
   1. அம்பாறை 2. குருணாகல் 3. மட்டக்களப்பு
   4. அனுராதபுரம்

7. இரும்புச் சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் நோய்?
   1. நிறக்குருவி 2. கண்டமாலை 3. மாலைக்கண்
   4. அனிமியா

8. பாடசாலை மாணவர்கள் தயாரித்து உண்ணக்கூடிய போசணைமிக்க உணவு?
   1. திரிபோஷா 2. இலைக்கஞ்சி 3. பாற்சோறு
   4. நூடில்ஸ்

9. அசுத்தமான நீரைக் குடிப்பதால் ஏற்படும் நோய் ?
   1. நெருப்புக் காய்ச்சல் 2. தொண்டைக் கரைப்பான் 3. பிடிசுரம் 4. காசநோய்

10. இந்தியா அமைந்திருப்பது இலங்கைக்கு எந்தத் திசையில் ஆகும்?
   1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மேற்கு

11. இலங்கையானது எந்த வெளிநாட்டவரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது?
   1. போர்த்துக்கீசர் 2. ஒல்லாந்தர் 3. மலாயர்
   4. ஆங்கிலேயர்

12. சிகிரியா ஓவியத்திலுள்ள பெண்கள் கையிலேந்தி உள்ள பொருள் எது?
   1. சங்கு 2. தர்மசக்கரம் 3. நீலோற்பலம்
   4. ஆடையணி

13. இலங்கைல் வாழ்ந்த பண்டைய மக்கள் பயன்படுத்திய பொருட்களையும், கலாச்சார அம்சங்களையும் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கும் இடமெது?
   1. நூதனசாலை 2. களஞ்சியசாலை
   3. மக்கள் பூங்கா 4. தொல்பொருள் திணைக்களம்

14. மின்னேரியாக் குளத்தை கட்டுவித்த மன்னன் யார்?
   1. துட்டகைமுனு 2. தாதுசேனன் 3. மகாசேனன்
   4. பராக்கிரமபாகு

15. கிரிக்கட் விளையாட்டில் ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை?
   1. 9 2. 11 3. 15 4. 16

16. இலங்கையில் மிக நீளமான நதி எது?
   1. மாணிக்ககங்கை 2. நில்வள கங்கை
   3. நைல்நதி 4. மகாவலிகங்கை

17. மின்னல் ஏற்படும் நேரங்களில் செய்யக் கூடாதது?
   1. நித்திரை செய்தல் 2. பாடம் படித்தல்
   3. செல்லிட தொலைபேசியில் கதைத்தல்
   4. உணவு சமைத்தல்

18. இடி மின்னல் தாக்கம் அதிகளவுள்ள பிரதேசம் எது?
   1. மழைநாட்டில் உள்ள வீடு 2. உயரமான மரத்தின் கீழுள்ள வீடு 3. திறந்த வெளியில் உள்ள வீடு
   4. மேற்கூறிய யாவும்

## சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

சென்று கொண்டிருப்பவன், காலத்தை வென்று கொண்டிருக்கிறான்:
நின்று கொண்டிருப்பவன், காலத்தை தின்று கொண்டிருக்கிறான்.

## தெனாலிராமனும் ஜோசியரும்!!!

குட்டிக்கதை



கிருஷ்ண தேவராயர் ஒருமுறை எதிரியைத் தாக்கப் படையோடு புறப்பட்டுப் போனார். ஒரு ஆற்றங்கரையைக் கடக்க வேண்டிய நேரத்தில், அரசவை ஜோசியர், "மன்னன், இன்றைக்கு நாள் நன்றாக இல்லை. அடுத்த திங்கட் கிழமை போருக் குப் போனால் வெற்றி நிச்சயம்" என்று சொன்னார்.

கிருஷ்ண தேவராயர் குழம்பினார். அவ்வளவு நாட்கள் கொடுத்தால் எதிரி உஷாராகிவிடுவான். அவன் எதிர்பாராத நேரத்தில் உடனே தாக்கினால் தான் வெற்றி. ஆனால், ஜோசியர் சொன்ன பின் சந்தேகம் வந்துவிட்டது. தெனாலிராமனிடம் ஆலொசனை கேட்டார்.

தெனாலிராமன் ஜோசியரை அழைத்தான். "எல்லோருக்கும் ஆரடம் சொல்கிறீர்களே, நீங்கள் இன்னும் எத்தனை வருடம் உயிரோடு இருப்பீர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"இன்னும் இருபது வருடங்கள் வாழ்ந்திருப்பேன்" என்றார் ஜோசியர்.

தெனாலிராமன் சடக்கென்று வாளை உருவி அவர் கழுத்தில் பதித்தது. இந்த விநாடியே உங்கள் ஆரூடத்தை என்னால் பொய்யாக்க முடியுமா? முடியாதா?" என்று கேட்டான்.

ஜோசியரின் விழிகள் அச்சத்தில் பிதுங்கின. "முடியும்.. முடியும்.." என்று அலறினார்.

அவ்வளவுதான் மன்னா ஜோசியம்! உங்களுக்கு எதிரான எந்த ஜோசியத்தையும் உங்களால் பொய்யாக்க முடியும்" என்று புன்னகைத்தான் தெனாலிராமன்.

கிருஷ்ண தேவராயர் ஆற்றைக் கடந்தார். எதிரியை வெற்றி கொண்டார்.

நீங்கள் தீர்மானமாக இருந்தால், கோள்களால் உங்களை எதுவும் செய்ய முடியாது.

வீண் சந்தேகங்களை விலக்கி, உங்கள் மீது நம்பிக்கை வைத்துத் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுங்கள். தானாகக் கனிந்து வரும் வெற்றிக்கனி!

- தன் நம்பிக்கை இருப்பின் எதையும் சாதிக்கலாம் -



செல்வன்.அமுதவாணன்
105, லோவர் வீதி, திருகோணமலை

## காட்டுமே!

அம்மை அப்பர் நல்லவர்,
அக்கை அண்ணர் நல்லவர்!
எம்மை எல்லாம் ஆண்டிடும்,
இறைவர் மிக்க நல்லவர்!

நல்ல உணவும் உடைகளும்,
நாளும் உடலின் தூய்மையும்,
கல்விச் சிந்த னைகளும்,
கன்னித் தமிழும் முக்கியம்!

ஆடல் பாடல் மூலமும்,
அறிவை வளர்த்தல் அவசியம்!
தேடல் என்றும் தேவையே,
தெளிவு வாழ்வின் உச்சமே!

நோயும் பிணியும் இல்லையேல்,
நூறு வரையும் வாழலாம்!
ஆயம் நோக்கும் - குறள் தரும்
அறிவும் வழியைக் காட்டுமே!

தாமரைத்தீவான்
[illegible]

# குறுக்கெழுத்து புதிர் 030

முடிவுத் திகதி : 16.10.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | | | ■ |
| 3 | 16 | த | | | 4 | 17 | 18 | |
| 5 | | | 6 | | | கை | | 19 |
| 7 | ண | 20 | | 21 | | | 8 | |
| ■ | | | 9 | | று | ■ | | ■ |
| 10 | | | | | 11 | | | |
| ■ | 12 | 22 ர | | | 13 | பு | | ■ |
| ■ | | | | 14 | | | | |
| 15 | | | | ல | | ■ | ■ | ■ |

## இடமிருந்து வலமாக

1. காண்டீபதாரியின் அஸ்திரத்தால் மடிந்தவர்.
2. சிவனடியார்கள்
3. குதிரையை வைத்து விளையாடும் இதுவம் சூதுதான்.
4. தீபாவளி சமயத்தில் இடப்படும் விசேட கோலம்
5. இவளையும் இவள் செய்யும் தொழிலையும் ஒரு சொல்லில் அழைக்கலாம்.
6. அண்மையில் வெளிவந்த ஜீவாவின் படம்.
7. நெற்றிக்கண் திறந்தமை பெண்களின் கூந்தலின் இது பற்றி வாதித்ததால் - திரும்பியுள்ளது.
8. ஆண்களின் பாரம்பரிய ஆடைகளுள் ஒன்று
9. யானை 10. நால்வர் சந்திக்கும் இடம்
11. காண்டீபதாரியை இவ்வாறும் அழைக்கலாம்
12. மனிதனுக்கு ஒட்சிசனைப் பெற்றுத்தர பங்களிப்பது
13. வெளிச்சம் தருவதை பேச்சு வழக்கில் குறிப்பது
14. ஆங்கில தொடர் நாடகம், ஒரு காரைத் தழுவியது
15. கடந்த வார மலைமுரசில் வெளியான நிலம் ஒப்படைக்கப்பட்டாலும் நிபந்தனைகள் விடுக்கப்பட்ட பிரதேசம்

## மேலிருந்து கீழாக

1. ஆடை இவ்வாறானாலும் கசக்கிக் கட்டு
2. பல திறமையாளிகள் இது இல்லாமையால் அவதியுறுகின்றனர்.
8. சிவனுறையும் இடம்
12. அன்னை தெரேசா செய்த தொழில்
16. இக் கைதிகளை வைத்தே தீவிரவாதிகள் அரசாங்கத்தை மிரட்டுவர் - குழம்பியுள்ளது.
17. பாசமலர் படத்தின் தீம் எந்த உறவை மிகைப்படுத்துகின்றது. - திரும்பியுள்ளது
18. தற்கொலை செய்யத் துணிந்தவன் ஏன் வாழ்வை எண்ணி ............ ஆகின்றான்.
19. தாம் செய்த தவறை யார் மீதும் போடுதல்.
20. இதனால் செய்யாததை தந்திரத்தால் செய்யலாம்.
21. பரதத்தில் முக்கியமானது
22. அழகிய பெண்களை ............, ஊர்வசி என்பர்.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 029 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 14 த | ர் | 15 ம | ம் | ■ | 2 ல் | ட | 16 க |
| 3 வி | டு | த | லை | ■ | ■ | 11 லை | 17 க | ட |
| 4 சு | 18 வா | 5 தி | 19 ரு | 20 மா | 21 வ | ள | வ | ன் |
| ■ | னி | ■ | 24 சி | வை | தே | 12 கி | ள | 22 வி |
| 6 பு | லை | ய | ன் | சே | தை | 7 து | ம் | பி |
| ■ | ■ | ■ | யா | னா | ■ | த் | ■ | சி |
| 8 ச | னா | 23 தி | ப | 13 தி | ர | ள் | ■ | ங் |
| ன் | ■ | ப் | 9 ப | ரா | ச | க் | தி | ■ |
| னி | ■ | பு | ■ | 10 சா | த் | தா | ன் | ■ |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*திருமதி. ஜே. சாரா*
*265டீ, மத்தியவீதி, திருகோணமலை.*

*திரு. எம். ஃபாகிரா*
*01, டைக்வீதி, திருகோணமலை.*

*செல்வி. கு. குணாந்தன்*
*103, நிலாவெளி வீதி, திருகோணமலை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 2/5 ஐ நூற்றுவீதத்தில் தருக.

02. AB ஓர் நேர்கோடு எனின், X ஐ காண்க.




03. $2y^4 x 3y^3 x 4y x y^0$ ஐ சுருக்குக.

04. ஒரு மாணவன் ரூபா 100 க்கு, புத்தகம் ஒன்று ரூபா 32 வீதமும், 4 ரூபா வீதம் X பேனாக்களும் வாங்கினான். அவனிடம் மீதமாக உள்ள பணம் எவ்வளவு?

05. $\frac{(X-1)}{3} = 5$ ஐ தீர்க்க.

06. 82.17/10 இன் பெறுமானம் காண்க.

07. ஒழுங்கான பல்கோணியின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானம் $140^0$ எனின், பக்கங்களின் எண்ணிக்கையை காண்க.

08. $27X^2 - 108$ காரணிப்படுத்துக.

09. $8x^2y, 12x^2y^2, 20xy^2$ ஆகியவற்றின் பொ.ம.சி, பொ.கா.பெ வைக் காண்க.

10. $x^2 + ax + 25$ என்பது ஒரு நிறைவர்க்க கோவை எனின், a இன் பெறுமானத்தைக் காண்க.

11. 1 Kg அரிசியின் விலை 42 ரூபா எனின், 1 Kg 750g அரிசியின் விலை யாது?

12. A யிலிருந்து பார்க்கும் போது இன் B திசைகோள் $222^0$ ஆகம். B யிலிருந்து பார்க்கும் போது A இன் திசைகோளை எழுதுக.

13. $x = -3, y = 2$ எனின், $3x^2y - 4x$ இன் பெறுமானம் காண்க.

14. 1 : 20000 எனும் அளவிடைக்கு வரையப்பட்ட படத்தில் 5cm உண்மையில் எத்தனை Km தூரத்தை குறிக்கும்.

15. $\frac{22}{7} x 9.5^2 - \frac{22}{7} x 4.5^2$ காரணி அறிவை பயன்படுத்தி பெறுமானம் காண்க.

16. $\frac{m(x-y)}{x} = r$ இதில் x ஐ எழுவாயாக மாற்றுக.

17. $3x + 2y - 4 = 0$ என்ற நேர்கோட்டின் 1. படித்திறன் யாது?
 2. இவ் நேர்கோட்டிற்கு சமாந்தரமான நேர்கோட்டின் படித்திறன் யாது?
 3. இச்சமாந்தரகோடு உற்பத்தியூடாக சென்றால் அதன் சமன்பாடு யாது?

18. 4, 5, 8, 7, 3, 6, 7, 5, 2, 5 எனும் எண்பரம்பலில்
 1. ஆகாரம் 2. இடையம் 3. இடை ஆகியவற்றைக் காண்க.

19. சுருக்குக. $\frac{(3x-6)}{3x} / (x-2)$

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. ஆவர்த்தன அட்டவணையின் மூன்றாம் ஆவர்த்தனத்திற்குரிய ஒரு மூலகம் வளியில் தகனமடைந்து ஒரு அமில ஒட்சைட்டை உண்டாக்குகின்றது. இம்மூலகம் யாது?
 1. Na 2. Mg 3. Al 4. S

02. $NaHCO_3$, $Ca(OH)_2$, $NH_3$ என்னும் மூன்று சேர்வைகளுக்கும் பொதுவான இயல்பு எது?
 1. திண்ம நிலையிலிருத்தல் 2. மூலமாக இருத்தல்
 3. அயன் சேர்வைகளாக இருத்தல் 4. தங்கீட்டு வழுச் சேர்வைகளாக இருத்தல்

03. காலநிலை மாற்றக் கோலங்கள் மாறுதல் தற்கால உலகம் எதிர்கொள்ளும் பிரதான சவாலாகும். இதற்கு அதிகளவில் பங்களிப்பு செய்யும் சூழற் பிரச்சினை யாது?
 1. ஓசோன் படை(விதானம்) வறிதாதல் 2. அமில மழை உண்டாதல்
 3. பூகோள வெப்பம் அதிகரித்தல் 4. நற்போசணையாக்கம்

04. மின்னல் ஏற்படும் போது குறைந்த ஆபத்துள்ள சந்தர்ப்பம் எது?
 1. மைதானத்திற்கு அருகிலுள்ள மரத்தின் கீழ் நிற்றல்.
 2. வயலில் வேலை செய்துகொண்டிருத்தல்
 3. மோட்டார் காரினுள்ளே இருத்தல்
 4. வீட்டினுள்ளே தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருத்தல்.

05. குடித்தொகை சரியாக வரையறுக்கப்படுவது
 1. ஒரு குறித்த பிரதேசத்தில் வாழும் எல்லா சாகியங்களும் அவற்றுடன் இடைத்தாக்கம் புரியும் உயிரற்ற சூழலுமாக
 2. புவி மீது அங்கிகள் பரந்திருக்கும் வலயமாக
 3. ஓர் அங்கியை இரையாக்கிக் கொள்ளும் வேறு அங்கிகளாக
 4. ஒரு குறித்த பிரதேசத்தில் குறித்த காலத்தில் வாழும் ஒரே இனத்தின் அங்கிகளாக

06. ஒரே வெப்ப நிலையில் இருக்கும் சமநீர் கனவளவுகளுடன் கறியுப்பு கட்டிகளையும் உப்புத் தூளையும் தனித்தனியாக சேர்த்து கரைக்கப்பட்டது. கரைசல் சோடி நிரம்பிய நிலைமையை அடையும் போது கரைந்த உப்புத் திணிவுகள் பற்றிய சரியான கூற்றினை தெரிந்தெடுக்க.
 1. கரைந்த திணிவுகள் சமமாகும்
 2. கரைந்த உப்புத் தூளின் திணிவு உப்புக் கட்டியிலும் பார்க்க கூடியது
 3. கரைந்த உப்புக் கட்டியின் திணிவு உப்புத்தூளின் திணிவிலும் பார்க்க கூடியது.
 4. கரையும் விதத்திற்கேற்ப கரையும் திணிவு மாறும்

07. முவ்வலுவளவு உலோகம் M ஆனது இருவலுவளவு அல்லுலோகம் X உடன் சேர்ந்து உண்டாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது?
 1. $M_3X_2$ 2. $M_2X_3$ 3. $MX_3$ 4. $M_2X$

08. ஒரு குறித்த மூலக அணுவில் இலத்திரன்கள் நிறைந்திருக்கும் சக்தி மட்ட எண்ணிக்கை நான்காகும். அதில் மிகப் புறத்தே உள்ள சக்தி மட்டத்தில் இரு இலத்திரன்கள் உள்ளன. அம் மூலகத்தின் ஆவர்த்தனமும் கூட்டமும் முறையே.
 1. 2, II ஆகும் 2. 2, IV ஆகும் 3. 4, II ஆகும் 4. 4, IV ஆகம்

09. குளோரீன் $^{37}_{17}Cl$ சமதானி அணுவில் உள்ள புரோத்தன்கள், நியூத்திரன்கள், இலத்திரன்கள் ஆகியவற்றின் எண்ணிக்கைகள் முறையே
 1. 17, 17, 20 ஆகும் 2. 17, 20, 17 ஆகும் 3. 20, 17, 17 ஆகும்
 4. 17, 17, 17 ஆகும்

## பாடம் : வரலாறு

01. இலங்கையின் வரலாற்றை பற்றி அறிவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு மூலாதாரங்கள் எமக்கு பெரும் துணை புரிகின்றன.
 i. இலங்கையின் வரலாற்று அறிய உதவும் வெளிநாட்டு மூலாதாரங்களை எழுதியோரை A,B,C ஒழுங்கில் குறிப்பிடுக.
 A – நெச்சுரலில் ஹிஸ்ரோறியா B - இந்திக்கா C – புவியியல் சாஸ்திர பிரவேசம் (மெகஸ்தனிஸ் , பிளினி, கொஸ்மஸ் , தொலமி , பாகியன்)
 ii. நாணய மூலாதாரங்கள் வெளிப்படுத்தும் அம்சங்கள் இரண்டை குறிப்பிடுக.
 iii. இலங்கையில் துட்டகைமுனுவின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.
 iv. இலங்கையில் நீண்ட காலம் நிலைத்திருந்த அனுராதபுர இராசதானி வீழ்ச்சி அடைய காரணமாக அமைந்த விடயங்கள் மூன்றை விளக்குக.

02.
 i. பின்வரும் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்ட யாப்புக்களை A,B,C ஒழுங்கில் தருக.
 A – கி.பி 1910 – 12 B. கி.பி 1931 C. கி.பி 1947
 ii. இலங்கையின் கரையோரத்தில் தோமஸ் மெயிட்லண்ட் முன்வைத்த நிர்வாக சீர்திருத்தங்கள் இரண்டை தருக.
 iii. இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் பங்களித்த விதத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.
 iv. இலங்கையில் மத்திய தர வகுப்பின் எழுச்சிக்கு கல்வி, செல்வம் பங்களித்தது என்பதை சுருக்கமாக விபரிக்குக.

03.
 i. இந்தியாவில் மௌரிய பேரரசை ஆண்ட மன்னர்கள் மூவரைத் தருக.
 ii. குஷாண பேரரசில் கனிஷ்க மன்னனால் ஆற்றப்பட்ட சமயப்பணிகள் இரண்டை குறிப்பிடுக.
 iii. மகதப் பேரரசை பலமிக்கதாக்க அதன் தொடக்க ஆட்சியாளர்கள் பின்பற்றிய இரு நடைமுறைகளை உதாரணத்துடன் விளக்குக.
 iv. இந்திய ஆட்சியாளர்களுள் அசோக மன்னனின் முக்கியத்துவத்தை மூன்று காரணிகள் ஊடாக விளக்குக.

04. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் தலைமையில் பிக்குகளுக்கு உபசம்பதாவிழா நடத்த பிக்குகள் அழைத்து வரப்பட்ட நாடு
 1. பர்மா 2. தாய்லாந்து 3. கம்போடியா 4. ஜாவா

05. இலங்கையில் சித்துல்பவ்வ சிலையை ஒத்த அவலோகிதேஸ்வரர் சிலை காணப்படும் ஆசிய நாடு
 1. சுமத்திரா 2. கம்போடியா 3. தாய்லாந்து 4. மியன்மார்

06. இலங்கையில் முதன் முதலில் கோப்பித்தோட்டம் ஆரம்பிக்கப்பட்ட இடம் 1. சிலாபம்
 2. சிங்கப்பிட்டி 3. மொரட்டுவ 4. போகம்பர

07. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் ஒரு விளைவு எனக் கருதப்படுவது எது?
 1. சர்வதேச சங்கத்தின் தோற்றம்
 2. ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்
 3. வேர்செயில்ஸ் உடன்படிக்கை
 4. ஐரோப்பாவின் [illegible]

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Complete answers to questions.

01. Amy is in hospital, isn't she?
 Yes, she <u>has been</u> in hospital since Monday.
02. Do you see Ann very often?
 No, I ...................... her for three months.
03. Are you waiting for me?
 Yes, she .................... married for ten years.
04. You know Linda, don't you?
 Yes, we .................... each other for ages.
05. Do you still play tennis?
 No, I .................... tennis for years.
06. Is Jim watching TV?
 Yes, he .................. TV all evening.
07. Do you watch TV a lot?
 No, I .......................... TV for a long time.
08. Have you got a headache?
 Yes, I ........................ a headache all morning.
09. George is never ill, is he?
 No, he ..................... ill since I've known him.
10. Are you feeling ill?
 Yes. I .................. ill since I got up.
11. Sue lives in London, doesn't she?
 Yes, she ......................... in London for the last few years.
12. Do you still go to the cinema a lot?
 No, I ....................... to the cinema for ages.
13. Is Margaret married?
 Yes, she ......................... married for ten years.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் நிலக்கரி.....

இலங்கையின் மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் தமது வேலைகள் நிறைவு பெற்றுவிட்டதாகத் தெரிவித்துள்ளதுடன் இலங்கை மின்சார சபையே தாமத்திற்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இலங்கை மின்சாரசபைத் தலைவர் இந்திய நிறுவனத்துடன் மின்ஆலைக் கட்டமானம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளதாகத் தெரிகின்றது.

இப்பேச்சுவார்த்தைகளில் சூழல்தாக்க அறிக்கையின் மீதான இந்தியப் பங்காளியின் பார்வை மற்றும் இந்தியப் பங்காளியுடன் மெற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டுமாணப் பணிகளை முன்னெடுத்தல் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படியான கட்டுமாணம் வினைத்திறன் அற்றது என இலங்கை மின்சபைப் பொறியிலாளர்கள் பலர் தமது கருத்தைத் தெரிவித்திருப்பதுடன் 250 மெகாவோற்றுக்கள் உலைகளிற்குப் பதிலாக 300 மெகாவோற்று உலைகளை நிர்மாணிப்பது சாலச் சிறந்தது எனவும் தெரிவித்திருந்தனர்.

இப்பிரேரணையை ஒப்பந்தத்திற்கு உள்வாங்கினால் இத்திட்டம் மேலும் காலதாமதப்படுத்தப்படும் என இ.மி.ச. தெரிவித்துள்ளது.

இந்தியாவிடம் ஏற்கனவேயுள்ள 250 மெகாவோற்றுக்கள் உலைகளை சர்வசாதாரணமாக இலங்கையில் கொண்டுவந்து தள்ளிவிட இந்தியா முயற்சிப்பதாகத் இ.மி.சவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைத் தமிழ்.....

இலத்திரனியல் அஞ்சலில் இக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழாசிரியர் சங்கம், ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புக்களை அறியாமல் சகல பாடசாலைகளிற்கும், அவ்வப்பாடசாலைகளில் சேவையாற்றும் முழு ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலையும் கணினியிலகக்த்துடன் பதிவு செய்து, நீங்கள் அனைவரும் எமது சங்கத்தின் அங்கத்தவர்களென மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அறிவித்துள்ளனர். இச்செயற்பாடு, தொழிற்சங்கச் சட்டத்தை மட்டுமல்ல, ஆசிரியர்களின் உரிமைகளை மதிக்கத்தவறும் செயற்பாடாகவும் நாங்கள் கருதுகின்றோம். அத்தோடு கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது. மேலும் ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக, கட்டாய ஆட்சேர்ப்புச் சம்பந்தமாக மூதூர் மற்றும் திருகோணமலை வலயங்களில் இருந்து அதிபர்கள் ஆசிரியர்களின் பல முறைப்பாடுகள், எமது கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்திற்கு, நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் கட்டணம்....

அறுபது கிலோவோற்றுக்களுக்கு மிகையான மின் நுகர்விற்கு பின்வரும் அட்டவணைப்படி மின் கட்டணம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நுகர்வு கிலோ வோற்றுக்களில் | அலகுக் கட்டணம் | நிலையான கட்டணம் |
|---|---|---|
| 0-60 | 7.85 | - |
| 61-90 | 10.00 | 90.00 |
| 91-120 | 27.75 | 480.00 |
| 120-180 | 32.00 | 480.00 |
| 180 மேல் | 45.00 | 540.00 |

## கோபியின்....

தொடர்ந்து அவருக்கு சுவிஸ்லாந்து அரசாங்கம் வதிவிட விசா வழங்கியிருந்ததாகவும் அந்நாட்டுக்குப் பயணிக்கும் போதே அவர் தடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது. விமான நிலையத்தில் அவரது விசா போலியானது எனச் சந்தேகங்கொண்ட அதிகாரிகளின் சந்தேகத்தை சுவிஸ் தூதுவராலயப் பிரதிநிதிகள் சமூகமளித்து போக்கியதாகவும் அதனைத் தொடர்ந்து அவர் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமாயின் குற்றப்புலனாய்வுப் பணியகத்தின் அனுமதி தேவை எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

கோபியுடன் சேர்த்து அப்பன் மற்றும் தேவியன் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் 10ம் திகதி பின்னிரவு நேரத்தில் நெடுங்கேணிப் பிரதேசத்தின் வெடிவைத்தகல் காட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது சுட்டுக் கொல்லப்பட்டனர் என அரசின் பேசவல்ல அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவர்களின் உடலங்கள் அறிந்துகொள்ள முடியாத இடமொன்றில் புதைக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் விடப்பட்டிருந்தன.

கோபியின் மனைவி திருகோணமலையில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கிளிவெட்டி.....

அவ்வாறு செய்ததாகக் கூறுமாறும் குறித் குடும்பத்திற்கு அறிவுரை வழங்கிய அச்சீருடையினர் வறுமை தொடர்பாக யாருக்கும் தெரிவிக்கக்கூடாது என அச்சுறுத்தியுள்ளதாகவும் தெரிகின்றது.

இதேவேளை மலைமுரசின் முயற்சியால் அனுப்பிவைக்கப்பட்ட சிறுநிவாரண உணவுப் பொருட்தொகுதியைப் பற்றிப் பலதரப்பினராலும் கிளிவெட்டி முகாமில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சிந்திக்காத வாக்களிப்பே....

வேறு இனத்தவர் எக்காரணம்கொண்டும் முதலமைச்சராக இருக்கக்கூடாது என்ற திட்டத்திலேயே நான் செயற்பட்டுவந்தேன். ஆனால் அக்கனவு கைநழுவிப்போய்விட்டதுடன் மாகாண சபையில் ஒரு தமிழ் அமைச்சர் கூட இல்லை. ஊவா மாகாணசபைத் தேர்தலில் பதுளை வாழ் தமிழ்மக்கள் அரசாங்கத்திற்கு வாக்களித்து ஒரு அமைச்சர் பதவியையும் மூன்று உறுப்பினர் பதவிகளையும் பெற்றுள்ளனர். கிழக்கின் தமிழ் மக்கள் இதனைச் சிந்திக்க வேண்டும். இன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் யாருக்குமே முதலாம் தர சித்தி வழங்கப்படுவதில்லை அதற்குக் காரணம் எதிர்காலத்தில் அவ்வாறான மாணவர்கள் தமது பதவியைப் பிடித்துவிடுவார்கள் என்ற பயம் விரிவுரையாளர்களுக்கு இருப்பதே என்றும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு பல்கலைக்கழக...

ரஜரட்டை மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களே மிக பிந்திய காலத்தில் மருத்துவப் பீடங்களைக் கொண்ட பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டன. அவ்விரு பல்கலைக்கழகங்களுக்குமே புதிய மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

## ஈழத்துக் கிராமிய...

3.30 மணிக்கு சல்லியம்பாள் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வுகள் முன்னாள் அஞ்சல் அதிபரான திரு.இ.சிதம்பரநாதன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக முன்னாள் த.தே.கூவின் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் அவர்கள் கலந்துகொள்ள கௌரவ விருந்தினர்களாக நகரசபைத் தலைவர் க.செல்வராசா, தொழிலதிபரும் நாராயணன் கோவில் பரிபாலகருமான திரு.இ.இராதாகிருஸ்ணன்,சிரேட்ட ஊடகவியலாளர் திரு.க. கோணேஸ்வரன் உட்பட மலைமுரசு ஆசிரியர் இரா.ஸ்ரீஞானேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## வறுமையால்.....

சாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது மனஅழுத்த நோய்க்காகவும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார்.

கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் சீவனோபாய வசதிகள் எவையுமின்றி மீள்குடியேறவிடாமல் வைக்கப்பட்டுள்ள சம்பூர் மக்களின் உண்மை நிலையை வெளிக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாக இத் தற்கொலை முயற்சி இடம்பெற்றுள்ளது.

தனது மகனைப் போரிலும் தனது மகளை இடப்பெயர்விலும் பலிகொடுத்துள்ள தாமோதரம்பிள்ளை என்ற 72 வயதான முதியவர் தனது 15 வயதான பேத்தியையும் 68 வயதான மனைவியையும் பராமரிக்கும் பொருட்டு பிச்சை எடுத்து வாழ்ந்துள்ளார். பிச்சையிலும் போதுமான வருமானம் கிடைக்காமையால் தம்மைப் பராமரிக்க யாருமில்லை என்ற நிலையிலேயே அவர் இந்த முடிவிற்குத் தள்ளப்பட்டுள்ளார்.



பொதுவைத்தியசாலையில் அவரைச் சந்தித்த மலைமுரசு அவருக்கான அடிப்படை வசதிகளை வழங்கியுள்ளதுடன் அவருடைய குடும்பத்தினருக்காக முதற்கட்ட ஒரு வாரகால உணவு நிவாரணத்தைப் பல் வைத்தியர் சசிதரன், எந்திரி பாலகுமார், வேல் வர்த்தகக் கல்லூரி, குணா கல்வி நிலைய அதிபர் செல்வேந்திரன் மற்றும் திரு. தம்பிஜயா ஆகியோரின் நிதிப் பங்களிப்புடன் மூதூர் இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

## மாணவனை மேசையில்.....

வழங்கப்படவில்லை என்பதால் அவர் தொடர்ந்தும் குற்றங்களைப் புரிவதாகவும் கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளரொருவரின் உறவினரான இவருக்கெதிராக நடவடிக்கைகளை எடுக்க கல்வி அமைச்சு அஞ்சுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் முஸ்லிம் பாடசாலைகளுககென தாபிக்கப்பட்ட மத்திய கல்வி வலயத்தில் மேற்படி ஆசிரியர் மேலும் நால்வருடன் இணைந்து அவ்வலயத்தின் கணக்காளரின் பதவி முத்திரையைப் போலியாகத் தயாரித்து சம்பளப் பட்டியலொன்றை மக்கள் வங்கிக்கு கடனுக்காக வழங்கியபோது பிடிக்கப் பட்டிருந்தார்.

அதனையடுத்து திருகோணமலையின் புல்மோட்டைப் பாடசாலையொன்றுக்குத் தண்டனை இடமாற்றம் பெற்ற அவர் கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளரொருவரின் செல்வாக்காலேயே மீண்டும் மட்டக்களப்பு மத்தி வலயத்தின் பாடசாலையொன்றுக்கு இடமாற்றத்தைப் பெற்றுள்ளார் எனத் தெரிகின்றது.

அப்பாடசாலையில் மாணவியொருவரைத் தாக்கியதை அடுத்து மாகாணக் கல்வி அமைச்சின் விசாரணைகளுக்கு முகம்கொடுத்துள்ள அவர் அவ்விசாரணைகள் முடியும் வரை கல்குடா வலயத்தின் மயிலங்கரைச்சி மலைமகள் வித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தார்.

அந்தப் பாடசாலையிலேயே இவ்வாசிரியர் மாணவனை மேசையில் அறைந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதனையடுத்து இரண்டாவது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வாசிரியர் தற்காலிகப் பணிநீக்கத்திற்கு உட்படுத்தப்படாமல் மீண்டும் வாகரைப் பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் தொடர்பாக த.தே.கூவின் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவர்கள் ஜனாப்.என். எம். நஸீர் என்ற மேற்படி ஆசிரியருக்கு எதிராக சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் எனக் கோரியுள்ளார். ஏற்கனவே தண்டனையொன்றைப் பெற்றுள்ள, இரண்டு விசாரணைகளுக்கு முகம்கொடுத்துள்ளவரை இடமாற்றம் மட்டும் செய்வது ஏன் என கல்விச் சமூகம் கேள்வி எழுப்பியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெருநாள் தொழுகை திடலில் செய்ய வேண்டுமா?

ஆண்களுக்கும், பெண்களுக்கும், ஒரே நேரத்தில் தொழுகை நடத்தியுள்ளார்கள். ஆண்களுக்கு தனியாக ஒரு முறையும், பெண்களுக்கு தனியாக ஒரு முறையும் நபியவர்கள் தொழ வைக்கவில்லை என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். தொழும்போது மாதவிடாய் பெண்கள் தள்ளி ஒதுங்கிக் கொள்வார்கள். தொழுகை முடிந்த உடன் உபதேசத்தைக் கேட்பதற்கு ஏனைய பெண்களோடு இருந்து கொள்வார்கள். இந்தப் பெருநாள் தொழுகை திடலில்தான் தொழ வைக்கப்பட வேண்டும் என்பதற்கு மற்றொரு முக்கிய காரணம் என்னவென்றால் மாத விடாய்ப் பெண்கள் பள்ளிக்கு வர முடியாது?

அதே போல பின்வரும் ஹதீஸை யும் கவனித்தால் இன்னும் மேலதிக மான தெளிவுகள் கிடைக்கும்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுப் பெருநாள் அன்றோ அல்லது நோன்புப் பெருநாள் அன்றோ புறப்பட்டுச் சென்று இரண்டு ரக்அத் கள் (மட்டுமே) தொழுதார்கள். அதற்கு முன்பும் எதையும் (கூடுதலாகத்) தொழவில்லை. அதற்கு பின்பும் எதையும் (கூடுதலாகத்) தொழவில்லை. பிறகு தம்முடன் பிலால் (ரலி) அவர்கள் இருக்க, பெண்கள் பகுதிக்கு வந்து (அறிவுரை வழங்கினார்கள். அப்போது) தர்மம் செய்யுமாறு அவர்களைப் பணித்தார்கள். உடனே பெண்கள் தம் காதணிகளையும் (கழுத்தில் அணிந்திருந்த) நறுமண மாலைகளையும் (கழற்றி பிலால் (ரலி) அவர்களின் கையிலிருந்த துணியில்) போட்டனர் (முஸ்லிம் 1616)

இந்த ஹதீஸின் படி பள்ளிக்கு சென்றால் பள்ளி காணிக்கையான தஹிய்யதுல் மஸ்ஜித் இரண்டு ரக் அத்துகள் தொழ வேண்டும். தொழாமல் உட்காரக் கூடாது. எனவே இதுவும் ஒரு வழிக் காட்டலாகும். பெருநாள் தொழுகைக்கு முன்னாலோ, பின்னாலோ, எந்த தொழுகையும் கிடையாது.

அப்படியானால் மைதானத்தில் தொழுதால் தான் அது சாத்தியமாகும். நாங்கள் நபியை நேசிக்கிறோம், நபியின் சுன்னாவை பின்பற்றுகிறோம் என்று சொல்லக் கூடியவர்கள் ஏன் இந்த சுன்னாவை புறக்கணிக்க வேண்டும்?

தொடரும் .. ..



# வாரமொரு ஜோக்

- அருணன் -

அவர் ஒரு பிரபல எழுத்தாளர். அத்துடன் ஏராளமான திரைப்படங்களுக்கும் கதை எழுதி ஏராளமான சொத்துக்களை சம்பாதித்திருந்தார்.

அவர் முதியவராகி மரணிக்கும் தருவாயில் தனது வாரிசுகளை தன்னருகே அழைத்து என் மரணத்தின் பின்னரும் நீங்கள் இப்போது போலவே ஒற்றுமையாக இருக்கவேண்டும். நான் சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தையும் சமமாக உங்கள் அனைவருக்கும் பிரித்து எழுதி பதிவாளர் அலுவலகத்திற்கு ஏற்கனவே அனுப்பிவிட்டேன். அனைவரும் மகிழ்சியாக வாழுங்கள் என ஆசிர்வதித்து இறந்து போனார். தகப்பனாரின் இறுதிக்காரியங்கள் நிறைவடைந்தபின் தங்களுக்குரிய சொத்துக்களின் விபரமறிய வருகை தந்திருந்த தங்கள் தந்தையாரின் குடும்ப வக்கீலை சூழ்ந்து கொண்டார்கள்.

குடும்ப வக்கீலோ பிள்ளைகளே! உங்கள் தந்தையார் எழுதிய உயில் செல்லுபடி யற்றது என பதிவாளர் அலுவலகத்தினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றார் சோகமாக. அதிர்ச்சியடைந்த பிள்ளைகள் ஏன் தவறாக எமது தந்தையார் சொத்தக்களை எழுதிவிட்டாரா என வக்கீலிடம் வினவினார்கள்.

ம் ம் ... நீங்களே இந்த உயிலை படியுங்கள் என அவர்களிடம் அதை கொடுத்தார். அதை படித்த அனைவரும் அப்படியே தலையில் அடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டனர்.

அவர் ஒரு கதாசிரியரல்லவா..! சொத்துக்களை எழுதி முடித்த பின் கையெழுத்து இடும் பகுதியில் இவை யாவும் கற்பனை என எழுதி வைத்திருந்தார்!!!.

ஹா! ஹா! ஹா!

சந்திரனில் காலை வைத்தாலும்,செவ்வாயில் காலை வைத்தாலும், பூமிக்குத் திரும்பி வந்தாதான் சோத்துல கை வைக்க முடியும் மச்சி!!

ஹா! ஹா! ஹா!

ஒரு பெண் புத்தகக்கடைக் காரரிடம், "பெண்கள் தான் உண்மையான திறமைசாலிகள்" என்ற புத்தகம் இருக்கிறதா என்று கேட்டார்

அதற்கு அந்த கடைக்காரர் சாரி மேடம் ஜோக்ஸ் புத்தகங்கள் அனைத்தும் முதல் தளத்தில் உள்ளது இங்கு இல்லை என்றார்





# வெந்நீரினால் கிடைக்கும் முகப்பொலிவு

தண்ணீரை அதிகளவில் உட்கொள்வது உடல்நலத்திற்கு மிகவும் நல்லது என பெரியவர்கள் முதல் மருத்துவர்கள் வரை சொல்லக் கேட்டிருப்போம். ஆனால் மிதமான நீரை பருகுவதை விட வெந்நீரை குடிப்பதால் அதிகளவில் நன்மைகள் உண்டு என்பது நம்மல் பலருக்கும் தெரியுமா என்பதே சந்தேகம் தான். இவ்வாறு வெந்நீரை தினமும் காலையில் அருந்துவது உடல்நலத்திற்கு ஆரோக்கியமானது என கூறப்படுகிறது. உடலை சுத்தம் செய்யும் இந்த வெந்நீர், வேகமாக வயதாவதையும் குறைத்து இளமையை தக்கவைத்து கொள்ள உதவும்.

- கடும் குளிர்காலத்தில் ஏற்படும் மூக்கடைப்பு, தொண்டைகட்டும் போது வெந்நீரை குடிப்பது உடலுக்கு இதமாக இருக்கும்.
- வெந்நீருடன் சிறிது எலுமிச்சைச் சாற்றை சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிக பலன் கிடைக்கும்.
- டீன் ஏஜ் பெண்களையும், ஆண்களையும் தொல்லை செய்யும் முகப்பருக்களும் வெந்நீர் பருகுவதால் சுத்தமாக அகன்றுவிடும்.
- அடிக்கடி வெந்நீர் குடிப்பதால் முடிகள் நன்றாக வளர்வதுடன், முடிகளின் வேர்களும் சுறுசுறுப்பாகி நல்ல வளர்ச்சி அடையும்.
- வெந்நீரால் இரத்த ஓட்டம் சீராவது மட்டுமின்றி நரம்பு மண்டலத்தின் ஓரத்தில் உள்ள கொழுப்புகளும் குறைந்துவிடும்.
- மாதவிடாய் ஏற்படும் நாட்களில் பெண்கள் பெரிதும் அவதிப்படுவார்கள். அந்த சமயங்களில் சூடான நீரை அடிக்கடி குடித்து வந்தால், மாதவிடாயினால் ஏற்படும் வலி வெகுவாகக் குறையும்.



# தக்காளி அவல்

### தேவையான பொருட்கள்

அவல் - 1 கப், தக்காளி – 1, பச்சைப் பட்டாணி - 1/2 கப் (வேகவைத்தது), கேரட் - 1 சிறியது, பெரிய வெங்காயம் - 1, கறிவேப்பிலை – சிறிதளவு, கொத்தமல்லி – சிறிதளவு, மிளகாய் வத்தல் - 3, பெருங்காயம் - 1 சிட்டிகை, மஞ்சள் - 1/2 தே.க, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 4 மே.க, கடலைப்பருப்பு - 1 தே.க, உளுத்தப்பருப்பு - 1 தே.க, கடுகு - 1 தே.க, எலுமிச்சைச் சாறு - 1 மூடி



### செய்முறை

அவலுடன் மஞ்சள், எலுமிச்சைச் சாறு, உப்பு, சிறிது நீர் சேர்த்து நன்கு கிளறி 10 நிமிடம் ஊறவைக்கவும். பின்னர் பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும். பெரிய வெங்காயம், தக்காளி, கேரட், கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை சிறிதாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.பின் அடுப்பில் தாச்சியை வைத்து எண்ணெயை ஊற்றவும். எண்ணெய் காய்ந்த பிறகு கடுகு, கடலை, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்க்கவும். பிறகு பட்டாணி, நறுக்கி வைத்த அனைத்தையும் சேர்த்து பச்சை வாடை போகும்வரை வதக்கவும். அதனுடன் பருப்பு, ஊறவைத்த அவலை சேர்த்து நன்கு கிளறவும். பெருங்காயம் சேர்த்து இறக்கவும்.

# சிகை அலங்காரம்






# இடுப்புவலியால் அவதியா?! இதோ!!

இடுப்பு வலி ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. முண்நாண் எலும்பு தேய்ந்ததால் இருக்கலாம், முண்நாண் எலும்புகளுக்கிடையே நரம்புகள் அழுத்தப்படுவதால் இருக்கலாம். அல்லது தசைப் பிடிப்பாகவும் இருக்கலாம். உட்காரும் போது முதுகை வளைத்து சொகுசு உட்காரல் வேண்டாம். செங்குத்தாக முதுகை நிமிர்த்தி அதை 90 பாகையில் வைத்தும் உட்காருவதும் கூடாது.

உட்காரும் போது மட்டுமின்றி ஏனைய நேரங்களிலும் உங்கள் முதுகு கழுத்து இடுப்பு போன்ற இடங்களில் உள்ள இயற்கையான உடல் வளைவுகளைச் சரியான முறையில் பேணுவது அவசியம்.



- முதலாவது பயிற்சி படுத்திருந்தபடி உங்கள் ஒரு முழங்காலை மடித்து நெஞ்சு வரை கொண்டு செல்வதாகும். முதலில் ஒரு காலில் செய்யுங்கள். பிறகு மற்றக் காலில் செய்யுங்கள். இறுதியாக இரண்டு கால்களையும் சேர்த்துச் செய்யுங்கள்.
- முதுகைப் பிற்புறமாக வளைப்பது மற்றொரு நல்ல பயிற்சியாகும்.





- படத்தில் காட்டியபடி தோள்பட்டையை வலது புறமாகச் சரியுங்கள். மீண்டும் அதே மாதரி இடது புறம் சரியுங்கள்.

இவற்றைத் தவிர உங்கள் எடையைச் சரியான அளவில் பேணுவது அவசியம். பாரமான பொருட்களைத் தூக்க முயலும் போது இடுப்பு பிடிப்பது மிக மிக அதிகம். இவ்வாறான வேலைகளின் போது கால்களை சற்று அகட்டி, முதுகை வளைக்காது, முழங்கால்களை மடித்து கீழே இருப்பதுபோல உங்கள் உடலைப் பதித்து ஆறுதலாகவும் மெதுவாகவும் பொருட்களைத் தூக்கினால் வலி ஏற்படாது தவிர்த்துக் கொள்ளலாம்.



கட்டில் மெத்தை போன்றவை வளைந்து தொய்யாததாக இருப்பது அவசியம். தொய்ந்த ஸ்பிரிங் கட்டில்கள் கூடாது. நிமிர்ந்து படுப்பராயின் முழங்கால்களுக்கு கீழ் தலையணை ஒன்றை வைப்பது உதவலாம். சரிந்து படுப்பராயின் முழங்கால்களுக்கு இடையில் வைக்கலாம்.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : கவனமாக பணிபுரிந்து திருப்திகர மான அளவில் வளர்ச்சியடைவீர்கள்.

**ரிஷபம்** : அளவான பணவரவு கிடைக்கும். செலவுகள் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

**மிதுனம்** : எதிரியால் உருவான தொல்லை, வந்த சுவடு தெரியாமல் மாறிவிடும்.

**கடகம்** : முயற்சி சிறந்து ஆதாய பணவரவை தரும். அறப்பணிகளில் ஈடுபடுவீர்கள்

**சிம்மம்** : அவசரகதியில் கூடுதல் பணி உருவாவதால் சிரமம் வரலாம்.

**கன்னி** : நியாய, தர்மம் உறுதியுடன் பின்பற்றுவதால் சிரமம் தாமாக விலகும்.

**துலாம்** : தன்னைச் சார்ந்தவர்களின் நலன் சிறக்க இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**விருச்சிகம்** : செயல்களில் அதிக பொறுப்புணர்வு நிறைந்திருக்கும். சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள்.

**தனுசு** : உங்கள் பேச்சு, செயலை குறை சொல்லும் எண்ணத்துடன் சிலர் நடந்து கொள்வர். அவர்களிடமிருந்து விலகுவதால் மன அமைதியை பாதுகாக்கலாம்.

**மகரம்** : உங்களின் கடந்த கால சிரமம் குறித்து பிறரிடம் சொல்ல வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்** : ஆர்வம் நிறைந்த மனதுடன் செயல்படுவீர்கள். உழைப்பிற்கான நற்பலன் அதிகரிக்கும். .

**மீனம்** : பொது இடங்களில் அதிகம் பேசுவதும், வேடிக்கை பார்ப்பதும் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## மாபெரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

தி/ இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் அமிர்தகுலசிங்கம் கோகுலன் 21 வயதுக்குட்பட்ட பிரிவில் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் 11.63m தூரத்தினை எறிந்து, வெள்ளிப் பதக்கத்தினை பெற்றதுடன், இந் நிகழ்ச்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட பெறுபேறான 11.20m ஐக் கடந்ததன் மூலம் இவ் ஆண்டிற்கான Colors award ஐயும் பெற்றுக்கொணடார். 2013ம் ஆண்டு இதே நிகழ்சியில் வெண்கலப்பதக்கத்தினை பெற்றார் என்பதும், இவருக்கான பயிற்சிகளை கடந்த இரண்டு வருடகாலமாக விளையாட்டு பயிற்றுனர் கனகரெட்னம் உமாசுதன் வழங்கிவருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



கனகரெட்னம் உமாசுதன் அமிர்தகுலசிங்கம் கோகுலன்

## ஹஜ் பெருநாள் விளையாட்டு விழா







திருகோணமலை ஜமாலியா மீனவர் சங்கம், மீனவர் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து மறைந்த மீனவர்கள் ஞாபகார்த்தமாகவும், ஹஜ் பெருநாளையும் முன்னிட்டு நடாத்தும் விளையாட்டு விழா 03.10.2014 வெள்ளிக்கிழமை மீனவர் சங்கத் தலைவர் முஹம்மது பஷீர் தலைமையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அதீதிகளாக திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினர் நூர் முஹம்மட் மற்றும் பலரும் கலந்து கொண்டதுடன் முதல் நாள் நிகழ்வாக கரப்பந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. பதினான்கு அணிகள் கலந்துகொண்டு இறுதிப் போட்டிக்கு பீச் ஈகில் ஏ (Beach Eagle -A) , பீச் ஈகில் பீ (Beach Eagle - B) அணிகள் தகுதி பெற்று பீச் ஈகில் ஏ (Beach Eagle -A) அணி வெற்றி பெற்றது. இப்போட்டிகள் பகல் இரவு போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது அத்துடன் இன்னும் பல போட்டிகளான கிரிக்கெட், நீச்சல், படகுப்போட்டி, வள்ள ஓட்டம் இன்னும் பல சுவாரசியமான போட்டிகளும் இடம்பெறவுள்ளதுடன் இறுதி நாள் போட்டி 07.10.2014 செவ்வாய் கிழமை இடம் பெற்றது.

## கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி



மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் மைக்கல் மென் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் பாதர் வெபர் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான ஏ-பிரிவு நொக்கவுட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது போட்டி 09.10.2014 அன்று நடைபெற்றது. இப்போட்டியில் சீலாமுனை யங்ஸ்டார் கழகமும், கல்லடி கடல்மீன்கள் கழகமும் மோதின.




## காணாமற் போன வீரர்கள்

விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தென் கொரியா சென்ற ஏழ்வர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் சட்டவிரோதமாக வேலை தேடுவதற்காகவே சென்றிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர். அவர்களுள் நேபாளில் இருந்து வந்த மூவரும் இலங்கையில் இருந்து சென்ற இருவரும், வங்காளம் மற்றும் பாலஸ்தீனத்திலிருந்து ஒவ்வொருவருமே காணாமற் போயுள்ளனர். அவர்களின் விசா அக்டோபர் மாதம் 19ம் திகதியுடன் முடிவடையும் நிலையில் அவர்கள் பிடிபட்டால் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என கருதி நாடுகடத்தப் படுவார்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## உலகக் கிண்ணத்தை கைப்பற்றுவோம்



அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி நிச்சயம் கிண்ணத்தை கைப்பற்றும் என இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார். லகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் இடம்பெறவுள்ளது.

## சிறகுகளின் கலையாடல் - 2014

ஆசிரியர் தின விசேட நிகழ்வாக "சிறகுகளின் கலையாடல் - 2014" தில்லைநாதன் பவித்திரன் தலைமையில் 12.10.2014 (ஞாயிற்றுக்கிழமை) பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்தில் மாலை 4.00 மணியளவில் இடம்பெறயுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திரு.ந.விஸேந்திரன் (வலயக் கல்விப் பணிப்பாளர்) மற்றும் சிறப்பு அதிதியாக திருமதி.சித்திதேவி பத்மநாதன் (சேவைக்கால ஆலொசகர்) ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் உலக ஆசான்கள் தினம் பற்றிய பேச்சு செல்வன்.க.பிரியலக்ஷன் நிகழ்த்த உள்ளார். அதனைத் தெடர்ந்து வளர்ந்து வரும் தொழிநுட்பம் மனித இருப்பை நிலை நிறுத்தும் அல்லது நிலை நிறுத்தாது எனும் தலைப்பில் 2016 கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களால் விவாதிக்கப்பட இருக்கின்றது.

அத்துடன் நிதர்சனத்தின் புத்திரர்கள் - நெறியாளகையை தி.பவித்ரன் அவர்களும் நிகழ்த்தவுள்ளனர். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர் விழா ஏற்பாட்டுக் குழுவினர்.

# சர்வதேசச் செய்திகள்

### • இலக்கிய நோபல் பரிசு

ஒவ்வொரு துறைவாரியாக நோபல் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் அறிவிக்கபட்டு வரும் நிலையில் இந்த ஆண்டிற்க்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற எழுத்தாளரின் பெயர் நேற்று அறிவிக்கபட்டுள்ளது. இந்த விருது பிரான்ஸ் நாட்டை சேர்ந்த எழுத்தாளர் பாட்ரிக் மோடியானோ அவர்கள் பெறுகிறார்.

### • எபோலா தாக்கிய முதல் அமெரிக்கர் பலி

எபோலா வைரஸினால் பாதிக்கப்பட்டு அமெரிக்க பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

### • அமெரிக்கா வீழ்ச்சி

உலகில் அமெரிக்காதான் பொருளாதார வளர்ச்சி மிகுந்த நாடாக கடந்த 1872ஆம் ஆண்டுமுதல் இருந்து வந்துள்ளது. சுமார் 240 வருடங்களாக இந்த நிலையை தக்கவைத்திருந்த அமெரிக்கா, முதல் முறையாக பொருளாதார வளர்ச்சி மிகுந்த நாடுகளில் முதலிடத்தை இழந்துள்ளது.

### • சீனாவில் பாரிய நில அதிர்வு

சீனாவின் யுன்னான் மாகாணத்தில் நேற்று இரவு ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சியில் 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதுடன் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

### • ஐவருக்கு தூக்கு

ஆப்கானிஸ்தானில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு இளம்பெண்களை கூட்டாக கற்பழித்த ஐந்து குற்றவாளிகள் 08.10.2014 அன்று தூக்கிலிடப்பட்டனர்.

### • எண்ணெய் வள சண்டை

சீன பிராந்தியத்தில் காணப்படும் தீவுகளில் ஒன்றான பாராசல்ஸில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த தீவு பகுதிக்கு சீனா. வியட்நாம், தாய்வான் போன்ற நாடுகள் உரிமை கோரி வருகின்றன. இது தொடர்பில் குறித்த நாடுகளுக்கிடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வருகிறது,

### • ஊறுகாய் டிரக் மூலம் 330 கிலோ ஹெராயின்

ஜேர்மனியின் வடக்கு ரைன் வெஸ்ட்பாலியாவில் ஊறுகாய் ஏற்றி சென்ற டிரக் மூலம் 330 கிலோ ஹெராயின் கடத்தியவர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

### • இப்படியும் ஒரு தாயா!

சேீனாவில் உள்ள 39 வயது Li Teng என்ற பெண் தனது ஒன்பது வயது மகன் Li Shao என்ற சிறுவனை எங்கு சென்றாலும் இடுப்பில் சங்கிலியால் கட்டிதான் இழுத்துக்கொண்டு செல்கிறார். அதுவும் சில நேரங்களில் சிறுவனை சங்கிலியால் தனது சைக்கிளோடு சேர்ந்து கட்டிவிடுவார். சைக்கிளின் வேகத்திற்கேற்ப அந்த சிறுவன் ஓடிவருவது பரிதாபமாக இருக்கும் என பலர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்த கொடுமையை பார்த்த காவல்துறை அதிகாரி அந்த பெண்ணை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று கடுமையாக எச்சரிக்கை செய்தார். ஆனால் காவல்நிலையத்தை விட்டு வெளியே வந்தவுடன் மீண்டும் தனது மகனை சங்கிலியால் கட்டி இழுத்து சென்றார். இதனால் ஆத்திரமடைந்த காவல்துறையினர் அந்த பெண்ணை கைது செய்து சிறையில் அடைத்தனர். ஒன்பது வயது சிறுவனை சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் சேர்த்துள்ளனர்.

### • இந்தியாவிடம் மன்னிப்புக் கோரியது நிவ்யோர்க் டைம்ஸ்

மங்கள்யான் விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வரலாற்றில் இடம்பிடித்து வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. மங்கள்யான் தொடர்பான கேலிச் சித்திரம் ஒன்றை வெளியிட்டமைக்காக மூத்த தினசரி பத்திரிகையான நிவ்யோர்க் டைம்ஸ் இந்தியாவிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

### • அமெரிக்காவை கண்டு பயப்படாத ஐ.எஸ்.ஐ.எஸ்



ஈராக், சிரியாவில் செயல்பட்டு வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை அழிக்க முயற்சியில் அமெரிக்கா தலைமையிலான கூட்டு படையினர் முயற்சித்து வருகின்றனர். இதனடிப்படையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ள பகுதிகளை இனங்கண்டு வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

### • 40,000 ஆண்டிற்கு முற்பட்ட ஓவியங்கள்!

இந்தோனேியாவில் உள்ள சுலாவேசி என்ற இடத்தில் உள்ள குகையில் சமீபத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தியதில் பழமையான ஓவியங்கள் அந்த குகையில் இருந்ததை கண்டுபிடித்தனர். அவற்றின் வயதை நவீன டெக்னாலஜி மூலம் சோதனை செய்து பார்த்ததில் மிகவும் அதிர்ச்சிகரமான தகவல்கள் ஆய்வாளர்களுக்கு கிடைத்துள்ளது.

### • செவ்வாயில் பெயர் பதிக்கலாம்.

தற்போது செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் பெயர்களை எழுத ஆசைப்பட்டால், நாசாவின் இணையதளப் பக்கத்திற்கு சென்று, ஓரியன்'ஸ் மார்ஸ் விசிட் (Orion's Mars Visit) என்ற பக்கத்தைப் பார்த்து அங்குள்ள விண்ணப்பத்தை பதிவு செய்ய நாசா வாய்ப்பளித்துள்ளது.

### • ஏன் இப்படி?



சீனாவில் கடந்த ஞாயிறு அன்று அதிகாலை 5.30 மணியளவில் நின்றிருந்த ஒரு கார் அருகே வந்த 28 வயது Lyndsey Baker என்ற பெண் திடீரென தான் அணிந்திருந்த உடை முழுவதையும் அகற்றி, முழு நிர்வாணமாக காரில் உட்கார்ந்து காரை ஸ்டாட் செய்தார். இதை அதிர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்த அந்த பகுதி மக்கள் போலீஸாருக்கு தகவல் கொடுத்தனர். தகவல் அறிந்த போலீஸார், அந்த காரை விரட்டி சென்று நிர்வாணமாக கார் ஓட்டிய குற்றத்திற்காக கைது செய்தனர்.

### • பின்லாடன் உடல் எங்குள்ளது?

அல்கொய்தா தலைவர் பின்லேடனை அமெரிக்க ராணுவம் கடந்த 2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத் என்ற இடத்தில் சுட்டுக்கொன்றது. பின்லேடனின் உடல் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ளதாக அல்கொய்தா அமைப்பு நம்பியது.

இந்நிலையில் பின்லேடனின் உடலை என்ன செய்தோம் என்பதை முன்னாள் அமெரிக்க ராணுவ அமைச்சர் எழுதிய புத்தகம் ஒன்று நேற்று அமெரிக்காவில் வெளியாகியுள்ளது. ஆபரெஷன் நெப்டியூன் ஸ்பியர் என்ற ராணுவ நடவடிக்கையில் பிடிபட்டு பின்னர் கொல்லப்பட்ட பின்லேடனின் உடலை 100 பண்ட் எடை கொண்ட இரும்புச்சங்கிலியால் தயார் செய்யப்பட்ட பைக்குள் வைத்து கடலில் போடப்பட்டதாக அவர் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

### • குர்திஷ் போராளிகளை கொன்று குவிக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ்

குர்து இன மக்கள் அதிகம் வசித்து வரும் சிரியா-துருக்கி எல்லையில் கோபனி நகரத்தை கைப்பற்றுவதற்காக கடந்த 16ம் திகதி முதல் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தங்களது தாக்குதலை தொடங்கியுள்ளனர்.

இந்த போரினால் அந்நகரத்தை விட்டு இதுவரை சுமார் 2 லட்சம் பேர் வெளியேறியுள்ளனர். மேலும் கடந்த இரண்டு நாட்களாக தாக்குதல் வலுவடைந்துள்ளதால் இதுவரை 500 குர்திஷ் போராளிகளை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் கொலை செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை வேண்டும் என்றால் த.தே.கூவின் பின் செல்லுங்கள்



## சுதந்திரக் கட்சியின் பட்டிருப்பு அமைப்பாளர்

மலசலகூடம் ஒன்றைக்கூடக் கட்டித்தரமுடியாதவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பட்டிருப்பு அமைப்பாளர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

உரிமை வேண்டும் என விரும்புகின்ற தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பின்னாள் செல்லுங்கள் எனக் கூறியுள்ள அவர் அவ்வாறு சென்ற பின்னர் தண்ணீர் வேண்டும், வீதி அபிவிருத்தி செய்ய வேண்டும் என என்னிடம் கேட்டு வராதீர்கள் என்றும் தெரிவித்துள்ளார். த.தே.கூவினால் உரிமை, உரிமை என்று மட்டுமே கத்தத்தான் முடியும் என்றும் தெரிவித்துள்ள அவர் த.த.கூ சம்பந்தமாகத் தான் பிழையாகக் கூறவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# முதலமைச்சர் பதவியைப் பறித்தது சிந்திக்காத வாக்களிப்பே!!!



கிழக்கு மாகாணசபையில் தொடர்ச்சியாக தமிழர் ஒருவரே முதலமைச்சராக இருக்க வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவை தமிழர்களின் சிந்திப்பற்ற வாக்களிப்பு சிதைத்துவிட்டதாக மீள்குடியேற்றப்பிரதி அமைச்சர் வி. முரளிதரன் தெரிவித்துள்ளார். 13

# கிழக்குப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு மேலும் நிதி


கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு மேலதிக நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மேற்கொண்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை அவரால் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு உயர்கல்வி வசதிகளை மேம்படுத்தும் கோரிக்கைகளுக்கான நிதியினை வழங்க அனுமதியளித்துள்ளது.

அதனடிப்படையில் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்திற்கு புதிய மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் நிதியை பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறையினை ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களின் மருத்துவத் துறைக்கு ஒப்பானதாக உயாத்தும் செயற்பாடுகளில் கல்வி அமைச்சு இறங்கியுள்ளது. 13

# அபாய நிலையில் மின்கம்பம் அச்சத்தில் மக்கள்.... அசமந்தப் போக்கில் நகரசபை



திருக்கோணமலை ஏகாம்பரம் வீதியிலுள்ள வீர நகர் கிராமத்தில் உள்ள மின் கம்பமொன்றே இவ்வாறு ஆபத்தான நிலையில் உடைவுகள்,வெடிப்புகளுடன் காணப்படுகிறது. நடப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேலான இம் மின் கம்பம் தற்போது மிகவும் வெடித்து,துண்டுகளாக கொட்டப்படுகிறது. இந்நிலமை ஒரு ஆண்டுகளாக தொடருகிறது. இதுபற்றி நகரசபைக்கு இக்கிராம மக்கள் முறையிட்டபோதும் சரியான நடவடிக்கை எடுக்கப்டாதிருக்கிறது.

விசேடமாக பொதுக்கிணறு ஒன்றும் மக்கள் பாவனையில் இம்மின்கம்பத்துக்கு அருகில் காணப்படுவதுடன், நெருக்கமாக வீடுகளும் உள்ளது. இம்மின் கம்பம் கூடிய விரைவில் கீழே விழும் நிலை இருப்பதை எண்ணி இப்பிரதேச மக்கள் அச்சம், பீதியுடன் இப்போதும் வாழ்கின்றனர் என எம செய்தியாளர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக நகரசபை உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாதவிடத்து ஏற்படும் பாதிப்புக்களுக்கு நகரசபையே பொறுப்பாக நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி நூலகத்திற்கு 25,000 புத்தகங்கள் திரட்டும் முயற்சி - மலைமுரசு ஆதரவு


போரினால் அழிவுற்ற கிளிநொச்சி மாவட்ட நூலகத்திற்கு புத்தகங்களைத் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பிற்கு மலைமுரசு தனது ஊடக அனுசரணையை வழங்க முன்வந்துள்ளது.

போருக்கு முன்னர் சுமார் 18,000 புத்தகங்களைக் கொண்டு இயங்கிய கிளிநொச்சி மாவட்ட நூலகம் போரின் பின்னர் தற்போதுவரை வெறும் 5,400 புத்தகங்களுடனேயே இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.



கிழக்கின் எழுத்தாளர்கள், புத்தியாளர்கள், நலன்விரும்பிகள், மாணவ மாணவிகள், தம்மிடமுள்ள புத்தகங்களை வழங்கி வைக்குமாறு மலைமுரசு வேண்டுகோள் விடுக்கின்றது. புத்தகங்களைளத் தமது பெயரைப் பொறித்து அன்பளிப்புச் செய்யுமாறு வேண்டியுள்ள மலைமுரசு புத்தகங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ மலைமுரசின் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது. (மேலதிகத் தொடர்புகளுக்கு 0777 555 738)

# மின்கட்டணம் மீளமைக்கப்பட்டது அலகுக்கு ரூபா 2.50



சனாதிபதி மஹிந்த ராஜபக்ச கடந்த 16ம் திகதி ஊவாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது அறிவித்த மின்கட்டணக் குறைப்பானது அமுலாக்கப்பட்டுள்ளதாக லங்கா எலெக்ரிசிட்டி கம்பனியின் முகாமைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இம்மீளமைப்பில் எரிபொருள் கட்டணம் முற்றாக நீக்கப்பட்டுள்ளதுடன் மின் கட்டணங்கள் 60 கிலோவோற்றுக்கள் வரைக்கும் ஒரு பிரிவாகவும் அதற்கு மேல் வேறு பிரிவாகவும் கணிப்பிடப்படவுள்ளது.

அறுபது கிலோவோற்றுக்கு குறையுமாயின் முதல் 30 அலகுகளுக்கு நிலையான கட்டணமாக ரூபா 30 மற்றும் அலகுக்கு ரூ.2.50மும், 31 தொடக்கம் 60 அலகுகளுக்கு நிலையான கட்டணமாக ரூபா 60 மற்றும் அலகுக்கு ரூ.4.85மும் அறவிடப்படும். 13

# ஈழத்துக் கிராமிய தெய்வீகக் காவடிச் சிந்துகள் - இறுவட்டு வெளியீடு

கலாபூசனம் அ.சித்திரவேலாயுதம் ஐயாவினால் பாடப்பட்ட தெய்வீகக் காவடிச் சிந்துகளை உள்ளடக்கிய இறுவட்டு தரிசனம் வெளியீட்டுப் பிரிவின் முயற்சியால் வெளியிடப் படவுள்ளது. நாளை 12ம் திகதி மாலை 13




# சீனக்கைத்துப்பாக்கியுடன் சம்மாந்துறைவாசி கைது

சம்மாந்துறை பிரதேசத்தில் கைத்துப்பாக்கி (பிஸ்டல்) உடன் 31 வயதுடைய ஒருவரை புதன்கிழமை(08) இரவு கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் தொடர்பாக சம்மாந்துறை காவல்துறைக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றினையடுத்து குறித்த நபரை தொடர்ந்து கண்காணித்துவந்துள்ளனர்.

இந்த நிலையில் புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் சீனநாட்டு தயாரிப்பான கைத்துப்பாக்கி மற்றும் அதற்குரிய மகசீன் ஒன்று ஆகியவற்றுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர் சம்மாந்துறை முதலாம் பிரிவு பாடசாலை வீதியைச் சேர்ந்தவராவர். சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை காவல்துறை மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 04.10.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org